மலர்-2 இதழ்-31 டிசம்பர் 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



ஓம்கார நாதத்தில் சுற்றிவரும் பிரபஞ்சம்

## ஞானம், விழிப்பு, முக்தி தரும்
# கார்த்திகை விளக்கு ஒளி

# ஏழுமலையின் பெருமைகளும் விளக்கமும்

வாழ்வில் நல்ல திருப்பங்கள் ஏற்பட வரம் அருளும் தலம் திருப்பதிதிருமலை. இங்கு ஏழுமலையான் குடியிருக்கும் கோவில் மிகப் பழைமையானது என்கின்றன ஞானநூல்கள். தொல்காப்பியம் போன்ற நூல்கள், இந்தத் தலத்தை ‘வேங்கடம்’ என்றும் பெருமாளை வேங்கடத்தான் என்றும் குறிப்பிடுகின்றன. பக்தர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றி வைத்து பிறப்பு – இறப்பு வட்டத்திலிருந்து விடுவித்து, முக்தி அளிக்கக்கூடிய சக்தி படைத்த ஒரே கடவுள் அவர்.

வ்ருஷிபாத்ரி, நீலாத்ரி, அஞ்சனாத்ரி, சேஷாத்ரி, கருடாத்ரி, நாரயணாத்ரி, வேங்கடாத்ரி என்ற ஏழு மலைக்கு மத்தியில் பெருமாள் வாசம் செய்வதால் பெருமாள், “ஏழுமலையான்” என்ற திருநாமத்தில் அழைக்கப்படுகிறார். திருப்பதி பெருமாள் தோன்றி சராசரியாக 250 கோடி ஆண்டுகள் மேல் இருக்கும்.

சாஸ்திர கூற்றுப்படி திருமலையில் இருக்கும் புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடி விட்டு தீர்த்தக்கரையில் இருக்கும் ஸ்ரீ ஆதிவராஹ சுவாமியை தரிசித்த பின்னரே திருவேங்கடமுடையானை தரி சிக்க வேண்டும். பின்னர் பகவானின் திருப்பிர சாதத்தை உட்கொண்ட பின்னரே இல்லத்துக்கு திரும்பி செல்ல வேண்டும்.

திருமலையில் சீனிவாசனுக்கு இடம் தந்தவரே இந்த வராக சுவாமி. அதற்க்கு உபகாரமாக தான் திருமலையில் முதல் ஆராதனம்,முதல் நிவேதனம் முதல் தரிசனமும் ஆதிவராக சுவா மிக்கு செய்யப்படுகிறது.இந்த திருமலைக்கு ஆதிவராஹ ஷேத்திரம் என்ற பெயரும் உண்டு. இந்த ஷேத்திரத்தின் அதிபதியாக வராக சுவாமி இருப்பதால் அவரை தரிசனம் செய்துவிட்டே திருவேங்கடமுடையானை தரிசிக்க செல்ல வேண்டும்.

திருமலையில் பெருமாளை பார்க்கும் அந்த ஒரு சில வினாடிகளில் நமது அறிவு செயலற்று போய் நமது பிரார்த்தனைகள் மறந்து விடும். மேலும் பெருமாளின் அலங்காரமும் திருமேனியும் மறந்து போய்விடும். கோவிலை விட்டு வெளியே வந்த பின்னரே நமது பிரார்த்தனைகள் நினைவுக்கு வரும். “அடடா. இதை அவரிடம் கேட்க மறந்துவிட்டோமே” என்ற கவலையும் வரும். இதற்கு அங்கு தினமும் நட மாடும் தேவதைகள், சித்தர்களின் பிரார்த்தனை, போன்றவைகளால் உண் டான வளையமே காரணம்.

ஸ்ரீனிவாச பெருமாளை அனைவரும் ஏழுமலையான் என்று அழைக்கிறார்கள். ஸ்ரீனிவாசன், கோவிந்தன், வெங்கடாசலபதி என்று பல பெயர்கள் கொண்ட திருமலை நாதனுக்கு ஏழுமலையான் என்று பெயர் வர காரணம் தெரியுமா? ஸ்ரீனிவாச பெருமாளுக்கு ஏழு மலைகள் உள்ளது. ஒவ்வொரு மலையின் பெயரிலும் ஒரு அர்த்தம் உள்ளது. ஏழு மலை களை கொண்டுள்ளதால் ஏழுமலையான் என்று அனைவரும் அன்புடன் அழைக்கின்றனர். அந்த ஏழு மலைகளைப் பற்றித் தெரிந்துக் கொள் வோம்.

## ஒன்றாம் மலை:

‘வேம்” என்றால் பாவம், ‘கட” என்றால் ‘நாசமடைதல்”. பாவங்களைப் போக்கும் மலை என்பதால் இந்த மலைக்கு ‘வேங்கட மலை” என்று பெயர். இம்மலையில் வெங்கடாசலபதியாக (ஸ்ரீனிவாசன்) மகாவிஷ்ணு காட்சி தருகிறார்.

## இரண்டாம் மலை:

பெருமாளின் அவதாரத்திற்காக ஆதிசேஷன் மலையாக வந்தார். அவதாரத்திற்காக வந்த ஆதிசேஷன் பெயரால் ‘சேஷமலை” என்று அழைக்கப்படுகிறது.

## மூன்றாம் மலை:

வே த ங் க ள் அனைத்தும் இங்கு மலை வடிவில் தங்கி எம்பெருமானை பூஜித்தன. எனவே இது ‘வேத மலை” என்று அழைக்கப்படுகிறது.

## நான்காம் மலை:

சுவாமியை வணங்க வந்த கருடாழ்வார் வைகுண்டத்திலிருந்து ஏழுமலையை எடுத்து வந்தார். அதனால் இந்த மலை ‘கருட மலை” எனப் பெயர் பெற்றது.

## ஐந்தாம் மலை:

விருஷபன் என்ற அசுரன், சுவாமியை வணங்கி மோட்சம் பெற்றதால் இம்மலைக்கு ‘விருஷப மலை” எனப் பெயர் வந்தது.

## ஆறாம் மலை:

ஆஞ்சநேயரின் தாய் அஞ்சனை தனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஆதிவராகரை வேண்டி தவமிருந்தாள். அதன் பயனாக ஆஞ்சநேயரைப் பெற்றாள். இவளது பெயரில் ஏற்பட்ட மலை ‘அஞ்சன மலை” எனப்படுகிறது.

## ஏழாம் மலை:

ஆதிசேஷனுக்கும், வாயு பகவானுக்குமிடையே போட்டி ஏற்பட்டபோது, மகாவிஷ்ணு நடுவராக இருந்தார். இருவரும் பலத்தில் சமமானவர்கள் என்று தீர்ப்பளித்தார். இதனால் வாயுவும், ஆதிசேஷனும் ஆனந்தம் அடைந்தனர். இதன் காரணமாக இந்த மலைக்கு ‘ஆனந்த மலை” என்று பெயர் வந்தது. இந்த ஏழுமலைகளின் காரணமாக திருப்பதி வெங்கடாசலபதிக்கு ஏழுமலையான் என்று பெயர் வந்தது.



# காமாட்சியின் ஆசி

## வீட்டில் எப்பவும் நல்லதை பேசவேண்டியதன் அவசியம்

பெரியவாளை ஆசிர்வதிக்க, "பெரிய அம்மாவே" வந்தது போல் அழகான லீலை ஒன்று நடந்தது, ஸாதாரணமாக அம்மா அப்பாவையும் விட தாத்தாவின் செல்லம் அலாதியானதுதான்.

ஆனால், இந்த 'உம்மாச்சி தாத்தாவோ' அப்படியெல்லாம் எந்த குழந்தைக்கும் செல்லம் கொடுத்ததில்லை.



அவ்வளவு ஏன்? ஸன்யாஸத்துக்குப் பிறகு பாரிஷதர்களைக் கூட, தொட்டறியாத அவர், குழந்தைகளைக் கூட தொட்டதில்லைதான்!

'உம்மாச்சி தாத்தாவைஞ்பார்த்தே ஆகணும்!' என்று அடம் பிடித்தே ஸ்ரீமடத்திற்கு ஒடி வரும் குழந்தைகளும் உண்டு.

இந்த தாத்தாவும், தனக்கும் வேற வேலையே இல்லை என்பது போல, புராணக் கதை, ஊர் கதை [கிட்டிப்புள், லேட்டஸ்ட் ரிலீஸ் சினிமா உள்பட] குழந்தைகளிடம் பேசியதுண்டே!

"நீங்க, ஏன் உம்மாச்சி தாத்தா இப்டி ட்ரெஸ் பண்ணிண்டு இருக்கேள்?".....

"தாத்தா. ஒனக்கு... ஏன் ஷூ கிடையாது"

இத்யாதி கேள்விகளுக்கு பொறுமையாக பதில் சொல்வார். ஒருநாள் கலவையில், இந்த அருமையான தாத்தா தங்கியிருந்த ஸமயம்,

வரிஸையாக தர்சனம் பண்ண வந்த அடியார் களிடையே ஒரு மூன்று அல்லது நாலு வயது பெண் குழந்தை தனியாக நின்று கொண்டிருந்தது.

ஒரு ஸுமுகமான பாரிஷதர், ஒவ்வொருத்தர் கோரிக்கையையும் கேட்டு, பெரியவாளிடம் சொல்கிறார்.

குழந்தையின் turn வந்தது.....

''ஒனக்கு என்னம்மா வேணும்?" பெரியவாளே குழந்தையிடம் கேட்டார்.

"தான்! தன்னுடையது!" என்பதுதான் நமக் கெல்லாம் தாரகமந்த்ரம்!

ஆனால், தனதென்பதே அறியாத கள்ள மில்லாக் குழந்தையும், எல்லாமே. தானாகிப் போன தயாபரனும் பேசிக் கொண்டால்...?

குழந்தை ஸமத்தாக கை கூப்பியபடி.

"பெரியவா தீர்காயுஸா நன்னா இருக்கணும்!"

ஸாதாரணமாக அன்பையும், பக்தியையும் கூட கட்டுப்படுத்தியே காட்டும் பெரியவா. இந்தக் குழந்தையின் ஆசீர்வாதத்தை கேட்டதும், உடனே அன்று அதிஸயமாக "காமாக்ஷி" என்று வாய்விட்டே கூறி விட்டார்!

சுற்றி இருந்தவர்கள் அதிர்ந்து போனார்கள்!



பின்னே........?

இது என்ன ப்ரார்த்தனையா? ஆசிர்வாதமா?

குழந்தையின் ஆழ்ந்த அன்பும், கள்ளமில்லாத மனஸும் அவருக்கு தெரியாது போகுமா? குழந்தையும் தெய்வமும் ஒன்றே என்று சும்மாவா சொன்னார்கள்?

நம்மிடையே ஸதாயுஸ் காலம் பெரியவா நடமாடியதற்கு. இந்த "பெரிய அம்மா"வின் ஆசிர் வாதமும் ஒரு காரணமாக இருக்கலாம்!

நம்முடைய அநுராதா நக்ஷத்ரக்காரர், 'அப்பழுக் கில்லாத நூறு' கண்டதற்கு "ஸதம் ஜீவேம ஸரத: ஸவீரா:" எப்படி அற்புதமாக பொருந்துகிறது!

அந்த குழந்தை வீட்டில் நமஸ்காரம் பண்ணும் போது, "தீர்காயுஸா நன்னா இரு" என்று வீட்டில் உள்ள பெரியவர்கள் சொல்லியிருப்பதை உள்வாங்கி, இன்று இந்த மா மதுரப் பெரியோ னுக்கு அவரிடமே, அவருக்காக "தீர்க்காயுள்" ப்ரார்த்தனை விடுக்கிறது!

எல்லாரையும் போல் ஸுயவிஷயமாக மட்டுமே பெரியவாளை போட்டு பிடுங்காமல், அவரது நலத் தை மட்டுமே கோரிய ஓர் அதிஸய ஜீவன் தான்!

வீடுகளிலும் எப்போதுமே நல்ல வார்த்தை களையே பெரியவர்கள் பேசினால், குழந்தைகளும் அதை பிடித்துக் கொள்ளும்.

கூடியிருந்தோரின் மேனி சிலிர்த்தது!

# ஒவ்வொரு நோயையும், நாடியின் மூலம் கண்டுபிடிக்கும் வழிமுறைகள்

நாடித்துடிப்பின் எண்ணிக்கை வயதுக்கேற்ப மாறுபடும். அதாவது ஒரு நிமிடத்திற்கு பிறந்த குழந்தைக்கு 140; குழந்தைகளுக்கு 100; பால பருவத்தில் 120–130; வாலிபத்தில் 90; முழு பருவ ஆணுக்கு 70 முதல் 90 வரை; முழு பருவ பெண்ணுக்கு 75 முதல் 80 வரை: தளர்ந்த பருவத்தில் 80; வயதான பிறகு 75 ஆகிய தடவைகளும் மற்றும் அமர்ந்திருப்பின் 40; நின்றால் 75; படுக்கையில் 67 தடவையும் வீதம் சாதாரணமாக நாடி துடிக்கும். இதில் கோதுமையின் அளவுள்ள ஒரு மாத்திரை அளவில் வாத நாடியும், அரை மாத்திரை அளவில் பித்த நாடியும், மேற்படி கால் மாத்திரை அளவில் கப நாடியும் நடந்தால் நலமாகும். இதில் மாறுதல் காணின் பிணி பற்றும் என்பதை அறியலாம் .

நாடித்துடிப்பை சித்திரை வைகாசி மாதத்தில் உதயத்திலும். ஆணி ஆடி ஐப்பசி கார்த்திகையில் மதியத்திலும் பங்குனி ஆவணி புரட்டாசியில் இரவிலும் முறையே தெளிவாக அறியலாம்.

மேலும் காலை மணி ஆறு முதல் பத்து வரை வாதமும், பத்து மணி முதல் இரண்டு மணி வரை பித்தமும், மாலை இரண்டு முதல் ஆறு வரை கபமும், மிகவும் எழுச்சியுடன் இருக்கும் ஆகவே அந்தந்த வேளையில் அவ்வவற்றை கண்டறிதல் சுலபமாகும். இங்ஙனமே மாலை ஆறு முதல் காலை ஆறு வரை உள்ள இரவு நேரத்திற்கும் கிரமப்படி கண்டறிதல் வேண்டும். மேலும் நாடித்துடிப்பில் 108 வர்மங்களும், இதனுடைய விரிவான 72000–ம் நாடிகளும் சேர்ந்து 4,448 வியாதிகளையும் கண்டுபிடிக்க முடியும். என்று சித்த மருத்துவமுறை குறிப்பிடுகிறது.



# ராகு கால பூஜை

எந்த ஒரு நல்ல காரியம் செய்யும் போதும் ராகுகாலம், எமகண்டம் போன்றவற்றை பார்த்து பார்த்து செய்வது வழக்கம்.

இவ்வாறு நாம் பார்க்கும் கால நேரங்கள் நமது ராசி, அதிர்ஷ்டம் போன்றவற்றுடன் சேர்ந்து பல்வேறு வெற்றி கிடைக்க வழிவகை செய்யும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்தவகையில் ராகுகாலத்தில் பொதுவாக எந்த காரியத்தையும் செய்வதில்லை. ஆனால் அந்த நேரத்தில் இறை நம்பிக்கையுடன் ராகு கால பூஜை செய்யும்போது கிரக மற்றும் கெடு தல் சக்திகளிலிருந்து விடுபடலாம் என்று முன்னோர்கள் வகுத்த பூஜைதான் ராகுகால பூஜையாகும்.

ராகு கால நேரம் என்பது வாரத்தில் அனைத்து நாட்களிலும் உண்டு. ராகு கால பூஜை என்பது என்ன, அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன என்று அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

செவ்வாய் கிழமை மற்றும் வியாழக் கிழமை களில் செய்யப்படும் ராகு கால பூஜை மிகவும் சிறப்பானது.

இதைத்தவிர மற்ற நாட்களிலும் ராகு கால பூஜை செய்யலாம். ஒவ்வொரு கிழமைகளில் ஒவ்வொரு விதமான மலர்களைக் கொண்டு பூஜை செய்வது வாழ்வில் நிம்மதியும் வளங்களும் பெருகும்.

சூரிய கிரகத்துக்கு ஞாயிற்று கிழமைகளில் பாரிஜாதம் மற்றும் வில்வ மலர்களைக் கொண்டு பூஜை

சந்திர கிரகத்துக்கு திங்கள் கிழமை களில் வெள்ளை அலரி மலர் கொண்டு பூஜை

செவ்வாய் கிரகத்துக்கு செவ்வாய் கிழமைகளில் செவ்வரளி, செந்தாமரை மற்றும் செம்பருதி மலர் கொண்டு ராகு கால பூஜை செய்வது செவ்வாய் தோஷம் விலகும்.

புதன் கிரகத்துக்கு புதன் கிழமை களில் துளசி கொண்டு பூஜிக்கலாம்.

வியாழக் கிழமைகளில் குரு கிரகத்துக்கு மஞ்சள் நிற மலர்கள் மற்றும் சாமந்தி மலர் கொண்டு பூஜை செய்யவேண்டும்.

சுக்கிரனுக்கு வெள்ளிக் கிழமைகளில் வெள்ளை அரளி கொண்டு பூஜை செய்யலாம்.

சனி பகவானுக்கு சனிக் கிழமைகளில் நீல நிற சங்கு மலர் கொண்டு அர்ச்சிக்க வேண்டும்.

மேற் கண்ட ஒவ்வொரு தினத்திலும் குறிப்பிட்ட மலர்களைக் கொண்டு பூஜை செய்தால் இல்லத்தில் அமைதி மற்றும் சுபிட்சம் பெருகும்.








வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில் இந்து சமயக் கருத்துக்களையும், பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

## ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033



# 18 படிகளின் அற்புத பயன்கள்



சபரிமலை ஐயப்பனை தரிசிக்க காடு, மலைகளைக் கடந்தாலும், சபரிகிரி வாசனிடம் தஞ்சம் அடைய, பதினெட்டுப் படிகளாக திகழும் பதினெட்டு தத்துவங்களைக் கடந்தால்தான் ஐயனை அடைய முடியும் என்று உணர்த்தவே, சபரிமலையில் 18 படிகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. அந்தவகையில் பதினெட்டு படிகளின் தத்துவம்!

**முதல் படி:** பிறப்பு நிலையற்றது, நாம் செய்யும் நன்மைகளும், தீமைகளும் நமதுபுண்ணிய, பாவங்களை நிர்ணயிக்கும் என்ற உண்மையை உணர்ந்து, இறையருளால் முக்தி அடைய வேண்டும் என்ற ஆத்ம உணர்வினை அளிக்கிறது. இதுவே விஷாத யோகமாகும்.

**இரண்டாம் படி:** சாங்கிய யோகம், பரம்பொருளை குருவாக உணர்ந்து அவரிடம் ஆத்ம உபதேசம் பெறுவது.

**மூன்றாம் படி:** கர்ம யோகம், உபதேசம்மட்டும் போதாது. மனம் பக்குவம் அடைய வேண்டும். அதாவது, பலனைக் கருதாமல் கடமையைச் செய்யும் பக்குவத்தை மூன்றாம்படி உணர்த்துகிறது.

**நான்காம் படி:** ஞான யோகம், பாவ, புண்ணியங்களைப் பற்றிக் கவலைப்படாமல், எதன் மீதும் பற்றின்றி பரமனை அடையும் வழியில் முன்னேறும் பாதையைக் காட்டுவது

**ஐந்தாம் படி:** சன்னியாச யோகம், நான், எனது என்ற சிந்தனை இன்றி, எல்லாவற்றையும் துறந்து, இறைச் சிந்தனை ஒன்றையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதி செயல்படும் வழியினைக் காட்டுகிறது

**ஆறாம் படி:** தியான யோகம், கடவுளை அடைய புலனடக்கம் மிக இன்றியமையாதது. ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, காது இவற்றை நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து அவை இழுத்த இழுப்புக்குச் செல்லாமல் தடுத்து, இறைவனால் அளிக்கப்பட்ட ஐம்புலன்களையும் நல்லவிதமாக இறைச் சிந்தனையால் நிரப்பி நல்வழிப்படுத்தும் வழியினைக்காட்டவே ஆறாம்படி அமைந்துள்ளது

**ஏழாம் படி:** ஞானவிஞ்ஞான யோகம், அனைத்தும் பிரம்மமே என்ற உண்மையை உணர வைக்கிறது.

**எட்டாம் படி:** அட்சர பிரம்ம யோகம், எப்போதும் இறைச் சிந்தனையில் மூழ்கி, வேறு சிந்தனைகளற்று இருப்பது.

**ஒன்பதாம் படி:** ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம், கடவுள் பக்தி மட்டும் இருந்தால் பயனில்லை; உண்மையான பக்தி, ஆன்மிகத்தை உணரவைத்து, ஏழையின் சிரிப்பில் இறைவனைக காண வைப்பது.

**பத்தாம் படி:** விபூதி யோகம், அழகு, அறிவு, ஆற்றல் என எத்தகைய குணங்களைக் கண்டாலும், அதை இறைவனாகவே உணர்வது.

**பதினொன்றாம் படி:** விஸ்வரூப தரிசன யோகம், உலகில் ஆண்டவனையும் ஆண்டவனில் உலகத்தையும் பார்க்கும் மனப் பக்குவத்தைப் பெறுவது

**பன்னிரண்டாம் படி:** பக்தி யோகம், இன்ப துன்ப, விருப்பு வெறுப்பு, ஏழை பணக்காரன் என்றவேறுபாடுகளை நீக்கி, அனைத்திலும் சமத்துவத்தைக் காண வைக்கிறது.

**பதிமூன்றாம் படி:** க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞவிபாக யோகம், எல்லா உயிர்களிலும் இறைவனே வீற்றிருந்து, அவ்வுயிர்களை இயக்குகிறார் என்ற உண்மை நிலையினை உணர வைக்கிறது.

**பதினான்காம் படி:** குணத்ரய விபாக யோகம், பிறப்பு, இறப்பு, மூப்பு ஆகியவற்றால் ஏற்படும் துன்பங்களைக் களைந்து இறையளுக்குப் பாத்திரமாவதை காட்டுகிறது

**பதினைந்தாம் படி:** புருஷோத்தமயோகம், தீய குணங்களை விட்டொழித்து, நற்குணங்களை மட் டும் வளர்த்துக் கொண்டு, நமக்குள் தெய்வாம்சத்தை அதிகரித்துக்கொள்ள வழிகாட்டுகிறது.

**பதினாறாம் படி:** தைவாசுரஸம்பத் விபாக யோகம், இறைவனது படைப்பில் அனைவரும் சமமானவர்களே என்ற உண்மை நிலையினை உணர்த்தி யாரிடமும் அகங்காரம் இல்லாமல் இருக்க வைக்க உதவுகிறது.

**பதினேழாம் படி:** ச்ரத்தாத்ரய விபாக யோகம், சர்வமும் பிரம்ம மயம் என்ற நிதர்சனத்தைப் புரிந்து கொண்டு பரபிரம்ம ஞானம்பெறுவதற்கு வழிகாட்டுகிறது.

**பதினெட்டாம் படி:** மோட்ச சன்னியாச யோகம், பதினெட்டு படிகளையும் படிப்படியாய் அடியெடுத்துக் கடந்து வந்தால்நம் கண் எதிரே காட்சி தரும் மணிகண்டப் பிரபு பேரொளியாய் தரிசனம் தந்து, நமது வாழ்வுக்கு வளம் சேர்ப்பார் என்பதே ஐயப்பனின் பதினெட்டு படிகள் நமக்கு உணர்த்தும் தத்துவமாகும்.ஐம்பொறிகள், ஐம்புலன்கள், ஐந்து கோயில்கள், மூன்று மலங் கள்இவற்றைக் கடந்து மனமொன்றி வழிபட்டாலே ஐயப்பசாமியின் திருவருள் நம்மை வந்து சேரும் என்பதே 18 படிகளின் தாத்பர்யமாகும்.

# பேசிக்கொண்டுதான் இருக்கிறார்

## இறைவன் நம்முடன்

இறைவன் அலைஅதிர்வுகளின் மூலமாகப் பேசுகிறான்.

பரமஹம்ஸர் கூறுகிறார்: “உங்கள் கற்பனைக்கெட்டாதபடி உருவமானவர். உங்களைப்போலவே உண்மையானவர். இதைத்தான் நான் இன்று கூற விரும்புகிறேன். இறைவன் எப்பொழுதும் நமக்கு பதிலளித்துக்கொண்டுதான் இருக்கிறார். அவருடைய எண்ண அதிர்வுகள் தொடர்ந்து அனுப்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றன; இதற்கு சக்தி தேவை; சக்தி ஒலியாக வெளிப்படுகிறது.இங்கே ஒரு மிக முக்கியமான விஷயம் உள்ளது. இறைவன் உணர்வுமய மானவன். இறைவன்தான் சக்தி. ’பேசுதல்’ என்றால் அலையதிர்வு அடைதலாகும். அவனுடைய பிரபஞ்ச சக்தியின் அலையதிர்வின் மூலமாக அவன் எல்லா நேரத்திலும் பேசிக்கொண்டே இருக்கிறான். அவன் படைப்பின் அன்னையாகவே ஆகிதானாகவே நிலமாக, நீராக, நெருப்பாகக் காற்றாக மற்றும் ஆகாயமாக உருவெடுத்துக்கொள்கிறான்.”

“மேலும் கண்களுக்குப் புலப்படாத அன்னையானவள் கண்களுக்குப் புலப்படும் வடிவங்களாக மலர்கள், மலைகள், சமுத்திரங்கள் மற்றும் நட்சத்திரங்கள் போன்றவற்றில் தன்னை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறாள். இறைவனின் பிரபஞ்ச சக்தியின் அலையதிர்வின் ஒரு வீதம்தான் சடப்பொருள். ஆனால் அவனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது எப்படி? என்பதுதான் கேள்வி. எல்லாவற்றையும் விட இறைவனுடன் பேசுவது என்பது மிகவும் கடினமான விஷயமாகும். அவன் நமக்குப் பதிலளிக்கத் தவறுகிறான் என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் அது அப்படியல்ல.; பிரச்சனை அவனிடம் இல்லை; நம்மிடம் தான். நம்முடைய உள்ளுணர்வு என்னும் தொலைபேசி அமைப்பு சீர்குலைந்துவிட்டது. இறைவன் நம்மை அழைக்கிறான். நம்முடன் பேசுகிறான். ஆனால் நாம்தான் அவன் குரலை கேட்பதில்லை” என குருதேவர் கூறியுள்ளார்.

மேலே கூறியதற்கான ஒரு சிறு உதாரணத்தை இங்கே நான் கூற விரும்புகிறேன்

ஒரு பெரிய தொழிற்சாலை. அங்கே இருக்கும் இயந்திரங்களை இயக்குவதற்கான சுவிட்சை போட்டுவிட்டால் அங்குள்ள எல்லா இயந்திரங்களும் மிகப்பெரிய சப்தத்துடன் இயங்கத் தொடங்கும். அவ்வாறு இயங்கும் தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களை யாராவது அழைத்தால் அந்த அழைக்கும் குரலை பணியாளர்களால் கேட்கமுடியுமா? இயந்திரங்களின் சப்தத்தில் மனிதனின் குரல் அல்லது அழைப்பு எப்படி கேட்கமுடியும்? மிகவும் அமைதியான இடத்திலிருக் கும்பொழுது மட்டும்தான் மற்றவர்களின் அழைப்பைக் கேட்கமுடியும். இந்த ‘மாயை’ என்ற சுவிட்சைப் போட்டு இயக்கிக் கொண்டிருக்கும் உலக மெனும் தொழிற்சாலையில் உழலுகின்ற மனிதனுக்கு இறைவன் அழைப்பதையோ அல்லது அவன் பேசுவதையோ எப்படி கேட்கமுடியும்? அவனுடைய குரல் உலக வியாபாரமாகின்ற தொழிற்சாலையிலுள்ள இயந்திரங்களின் இரைச்சலில் இறைவனின் குரலைக் கேட்கமுடியாது. அவன் குரலை அமைதியினூடேதான் கேட்க இயலும். அமைதிதான் இறைவன். உலக வியாபாரமாகின்ற தொழிற்சாலைக்குள் அமைதி எங்கே இருக்கமுடியும்? ஆனால் மன ஒருமைப்பாட்டினை பெற்றுவிட்டால் ஒருவனுக்கு அக அமைதி கிடைத்துவிடும். அவ்வாறான மனிதன் உலக வியாபாரமெனும் தொழிற்சாலையிலிருந்தாலும்கூட இறைவனின் குரலை அல்லது இறைவனின் அழைப்பை அல்லது இறைவனின் வழிகாட்டுதலை அவனால் நன்றாகவே உணரமுடியும்.



குருதேவர் கூறுகிறார்: ”பிரபஞ்ச அலையதிர்வு எல்லா மொழிகளிலும் “பேசுகிறது. மகான்கள் அவனது குரலைக் கேட்கிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு மகான் எப்பொ ழுது பிரார்த்தனை செய்தாலும் இறைவனின் பதிலளிக்கும் குரல் விண்ணிலிருந்து வருவதுபோல் தோன்றும். பேசுவதற்காக இறைவனுக்கு ஒரு தொண்டை தேவையில்லை. நீங்கள் மிகவும் திடமாகப் பிரார்த்தனை செய்தால், அந்தப் பிரார்த்தனை அலையதிர்வுகள், உடனே அதிர்வலைப் பதிலைப் பெற்றுத்தரும். நீங்கள் கேட்டுப் பழகியிருக்கும் எந்த மொழியிலும் அது வெளிப்படும். ஜெர்மன் மொழியில் பிரார்த்தித்தால் ஜெர்மன் மொழியிலே நீங்கள் பதிலைக் கேட்பீர்கள். ஆங்கிலத்தில் பேசினால் பதிலை ஆங்கிலத்திலேயே கேட்பீர்கள்.”

“பலவகையான மொழிகளின் அலையதிர்வுகள் பிரபஞ்ச அலையதிர்வில்தான் ஆரம்பமாகின்றன. இறைவன் பிரபஞ்ச அலையதிர்வாக இருப்பதால், எல்லா மொழிகளும் தெரிந்தவர். மொழி என்பது என்ன? அது ஒரு விதமான அதிர்வலை. அதிர்வலை என்பது என்ன? அது ஒரு விதமான சக்தி. சக்தி என்பது என்ன? அது ஒரு விதமான எண்ணம். இறைவன் நம்முடைய எல்லா பிரார்த்தனைகளை கேட்டாலும் அவன் எல்லா சமயத்திலும் மறுமொழி கூறுவதில்லை. நம் நிலைமை எதைப்போன்றது என்றால் தம் தாயாரைக் கூப்பிடும் ஒரு குழந்தையைப் போன்றது. ஆனால் தாயார் வரவேண்டியது அவசியம் என்று நினைப்பதில்லை. அவள் குழந்தையை அமைதிப்படுத்துவதற்காக விளையாட்டுப் பொருட்களை அனுப்புகிறாள். ஆனால் தாயாரின் இருப்பைத் தவிர வேறு எதனாலும் அந்தக் குழந்தை அமைதி அடைய மறுக்கும்பொழுது, அவள் வருகிறாள். நீங்கள் இறைவனை அறிய விரும்பினால், தாயார் வரும்வரை அழுகின்ற அடம்பிடிக்கும் குழந்தையைப் போல் இருக்கவேண்டும். நீங்கள் அவளுக்காக அழுவதை நிறுத்தாமலிருக்க உங்கள் மனதில் உறுதிபூண்டால் தெய்வத்தாய் உங்களுடன் பேசுவாள். நீங்கள் உங்கள் அழுகையில் பிடிவாதமாக இருந்தால், அவள் தன்னுடைய படைப்பென்னும் வீட்டு வேலையில் எவ்வளவு ஈடுபட்டிருந்தாலும் அவள் பேசித்தான் தீரவேண்டும். ஒரு பக்தன் இரவும் பகலும் இடைவிடாமல் இறைவனுடன் பேசினால் அவன் பதிலளிப்பான் என்று இந்து சாஸ்திரங்கள் நமக்குக் கூறுகின்றன. ஆனால் யார் அப்படிச் செய்கிறார்கள்? ஒவ்வொரு நாளும் உங்களுக்கு “முக்கியமான நிகழ்ச்சிகள்” இறைவனிடமிருந்து உங்களை தூரத்திலேயே நிறுத்தும் “பிசாசு” இருக்கின்றன. நீங்கள் வெறுமனே சிறிது பிரார்த்தனை செய்துவிட்டு, பின்பு வேறு எதாவது விஷயத்தைப் பற்றி எண்ண ஆரம்பித்துவிட்டாலும் அல்லது “பரமபிதாவே, நான் உங்களை அழைக்கிறேன், ஆனால் எனக்கு பயங்கரமாக தூக்கம் வருகிறது, ஓம் சாந்தி” என்று பிரார்த்தனை செய்தாலும் இறைவன் வரமாட்டான். இடைவிடாமல் பிரார்த்தனை செய்யவேண்டும் என்று ஒரு மகான் கூறியிருக்கிறார்.”

“ஓர் அன்பன் தன்னுடைய அன்பை இயந்திரகதியில் வலியுறுத்தும்பொழுது, அவனுடைய வார்த்தைகள் உண்மையல்ல என்று அவனுடைய அன்பிற்குரியவள் அறிவாள்; அவன் இதயத்தில் உண்மையில் என்ன இருக்கிறது என்பதை அவள் ‘கேட்கிறாள்’ அதேபோல் இறைவனின்

**23 பாகம்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

பக்தர்கள் அவனிடம் பிரார்த்திக்கும்பொழுது அவர்களுடைய இதயங்களும் மனங்களும் பக்தியின்றி வறண்டு உள்ளனவா என்பதையும், அவர்களுடைய எண்ணங்கள் கட்டுக்கடங்காது, எங்கும் அலைபாய்கின்றனவா என்பதையும் அவன் அறிவான்; அரைகுறை அழைப்புகளுக்கு அவன் செவிசாய்க்கமாட்டான். ஆனால் இரவுபகலாக எந்த பக்தர்கள் அதிதீவிரமான பிரார்த்தனையுடன் அவனுடன் பேசுகிறார்களோ, அவர்களுக்கு அவன் தோன்றுவான். அவ்வாறான பக்தர்களிடம் அவன தவறாமல் வருகிறான்." என்று குருதேவர் அருளுகிறார்.

## மிக உயர்ந்ததைவிட குறைந்த எதனாலும் திருப்தி அடையாதீர்கள்

மேலும் அவர் கூறுகிறார்: "இறைவன் உங்களுக்காக அழுகிறான். நீங்கள் அவனிடமே திரும்பி வரவேண்டும் என அவன் விரும்புகிறான். அது உங்கள் பிறப்புரிமை. என்றைக்காவது ஒருநாள் நீங்கள் இந்த உலகத்தை விட்டு போயே ஆகவேண்டும். இது உங்களுக்கு நிரந்தரமான இடம் இல்லை. உலக வாழ்க்கையானது ஒரு பள்ளிக்கூடம் மட்டுமே; இங்கே நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பதை காண்பதற்காக அவன் நம்மை இங்கே அனுப்பியிருக்கிறான். அவ்வளவுதான். இறைவன் தன்னை வெளிப்படுத்துவதற்கு முன்பு, அவன் தெரிந்துகொள்ள விரும்புவது, நாம் உலகத்தின் பகட்டான புகழை விரும்புகிறோமா அல்லது கீழ்க்கண்டவாறு கூறுவதற்கு வேண்டிய ஞானத்தைப் பெற்றுவிட்டோமா என்பதுதான்."

"இறைவா, நான் இவை எல்லாவற்றையும் கடந்துவிட்டேன். நான் உங்களுடன் மட்டும்தான் பேச விரும்புகிறேன். எனக்கு உண்மையிலேயே சொந்தமானது எல்லாமே நீங்கள்தான் என்று எனக்குத்தெரியும். எல்லோரும் சென்று விட்டபொழுதும் நீங்கள் என்னுடன் இருப்பீர்கள்."

"மனிதர்கள் திருமணத்திலும் செல்வத்திலும் குடிப்பதிலும் மற்றும் பிறவற்றிலும் இன்பத்தைத் தேடுகிறார்கள்; ஆனால் இப்படிப்பட்டவர்கள் விதிவசப்பட்ட கைப்பொம்மைகள். ஒருமுறை இந்த ஞானம் வந்துவிட்டால், ஒருவன் வாழ்க்கையின் உண்மையான காரணத்தை அறிகிறான், மேலும் இயல்பாகவே இறைவனைத் தேட ஆரம்பிக்கிறான். ஒருவன் எவ்வளவு சுயநலமின்றி இருக்கிறானோ மற்றவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி அளிக்க முயல்கிறானோ, அந்த அளவிற்கு அதிகமாக அவன் இறைவனைப்பற்றி நினைப்பான். மேலும் உலக நோக்கங்கள் மற்றும் மனித ஆசாபாசங்களைப்பற்றி ஒருவன் எவ்வளவு அதிகம் நினைக்கிறானோ அவ்வளவு தூரத்திற்கு அவனுடைய ஆத்ம ஆனந்தம் அவனிடத்திலிருந்து பின்னடைந்துவிடும். புலன்களின் சக்தியில் உழன்று ஒவ்வொரு திருப்பத்திலும் துன்பங்களால் நசுக்கப் படுவதற்காக நாம் இங்கே உலகத்தில் அனுப்பப் படவில்லை. உலகத்தைச் சார்ந்துள்ளது எதுவும் தீயது. ஏனெனில் அது ஆத்மாவின் பேரின்பத்தை வெளிப்படுத்தாமல் அடக்குகிறது. இறைவனைப் பற்றிய எண்ணங்களில் மனதை ஆழ்த்துவதில் பேரானந்தம் கிடைக்கிறது."

மேலே கூறப்பட்டுள்ளது சம்பந்தமான ஒரு கதையை கீழ்க்கண்டவாறு கூற விரும்புகிறேன். இறைவன்தான் உண்மை; உண்மையே இறைவன். நெறிதவறாத மனிதனிடத்தில் இறைவன் நிச்சயம் வருவான். சேவை, சுயநலமின்மை, பணிவு, உண்மையைக் கையாளுதல் போன்ற குணநலன்கள் இறைவனுக்குப் பிடித்தமானவை. அவை இறை குணங்கள். இறைவனுக்குப் பிடித்தவாறு யார் வாழ்கிறானோ அவனை இறைவன் சொந்தமாக்கிக்கொள்வான். ஒருவன் இறைகுணங்களை கடைபிடித்து நடந்தாலே அவனுடன் இறைவன் இருப்பான்; அவனுக்கு தேவையான அனைத்து செல்வங்களையும் இறைவன் தருவான். எல்லாம் தந்தாலும் இறைவனின் அன்பும் அருளும் இல்லையேல் அதாவது இறைவனையன்றி உள்ள வாழ்க்கை மனிதனால் வாழ இயலாது.

நெடுங்காலத்திற்கு முன்னர் ஒரு நாட்டை அரசன் ஒருவன் நன்னெறி தவறாமல் ஆண்டு வந்தான். உலகம் எங்கும் அவன் புகழ் பரவி இருந்தது. நாள்தோறும் அவன் கோட்டைக்கு வெளியே சென்று கடலில் நீராடிவிட்டுத் திரும்பு வான். அப்பொழுது அழகான பெண் ஒருத்தி கோட்டைக்கு வெளியே செல்வதைப் பார்த்தான்.

"அம்மா! தாங்கள் யார்? இந்த நேரத்தில் எங்கே செல்கிறீர்கள்?" என்று கேட்டான் அரசன். "நான்தான் திருமகள். எந்த இடத்திலும் நான் அதிக காலம் தங்கக்கூடாது. இந்த நாட்டில் நான் நெடுங்காலம் தங்கிவிட்டேன். ஆகவே மாற்றம் வேண்டி வேறு இடம் செல்கிறேன்." என்றாள் அந்தப் பெண். "உங்களுக்கு எங்கே செல்ல விருப்பமோ அங்கே செல்லுங்கள். நான் தடுக்கமாட்டேன்" என்றான் அரசன். அந்தப் பெண்ணும் வெளியே சென்று மறைந்தாள். சற்று நேரத்தில் இன்னொரு பெண் வந்தாள். "நான் தான் கொடை. திருமகள் இல்லாத இடத்தில் என்னால் இருக்கமுடியாது. ஆகவே நானும் இந்நாட்டை விட்டுச் செல்கிறேன்." என்று சொன்னாள். அவளையும் அவன் தடுக்கவில்லை. சிறிது நேரத்தில் இன்னொரு பெண் அங்குவந்தாள். "திருமகளும் கொடையும் இல்லாத இடத்தில் நன்னடத்தையாகிய என்னால் எப்படி இருக்க முடியும்? நானும் போகிறேன்" என்றாள். மறுப்பு ஏதும் சொல்லாமல் அமைதியாக நின்றான் அரசன்.



நான்காவதாக வேறொரு பெண் அங்கே வந்தாள். "நான்தான் உண்மை. திருமகளும் கொடையும் நன்னடத்தையும் இல்லாத இடத்தில் என்னால் எப்படி இருக்கமுடியும்?" என்றாள். இதைக் கேட்டவுடன் அந்த அரசன் அவளுடைய திருவடிகளில் விழுந்தான். அவன், "அம்மா! யார் இல்லாமலிருந்தாலும் என்னால் இந்த நாட்டில் இருக்கமுடியும். "உண்மை"யாகிய தாங்கள் இல்லாமல் என்னால் இந்த நாட்டில் இருக்கமுடியாது. தாங்கள் இங்கே தங்கியே ஆகவேண்டும்." என்று பணிவாக வேண்டினான். அரசனின் வேண்டுகோளுக்கிணங்கிய 'உண்மை' அங்கேயே தங்குவதற்கு ஒப்புக்கொண்டாள். சிறிது நேரத்தில் நன்னடத்தை அந்த நாட்டிற்குத் திரும்பி வந்தாள். உண்மை இருக்குமிடத்தில் நான் இருப்பேன்" என்றாள். அடுத்து கொடையும் திரும்பி வந்தாள். உண்மையும் நன்னடத்தையும் தங்கும் இடத்தில் நான் இருந்தாக வேண்டும்." என்றாள். "இம்மூவரும் இருக்கும் இடத்தில் நானும் இருப்பேன். நான் இந்த நாட்டை விட்டு நீங்கமாட்டேன்" என்றாள் திருமகள்.

இக்கதையின் பொருள் என்னவென்றால், "உண்மை"யாக வாழும் ஒருவனுடன் நிச்சயம் இறைவன் இருப்பான். இறைவனுடன் உண்மையாக இருப்பது என்பதுதான் இதன் பொருள். ஒருவன் இறைவனுடன் உண்மையாக இருந்தாலே வாழ்நாளில் அவனுடைய அனைத்து தேவைகளும் இறைவன் பூர்த்தி செய்வான் என்பது இக்கதையின் மூலம் நிரூபணமாகிறது. 'உண்மை' என்ற பெண்ணின் திருவடிகளில் அரசன் விழுந்ததின் பொருள் என்னவெனில், 'உண்மைதான் இறைவன்; இறைவன் தான் உண்மை" என்பது புலனாகிறது. அதுமட்டுமின்றி இதில் மேன்மையான கருத்து ஒன்று உள்ளது. அது என்னவெனில் "இறைவனிடத்தில் சரணடைவது" என் பதே பொருளாகும். இறைவனிடத்தில் சரணடைந்தால் நம்மைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. எல்லாவற்றையும் இறைவன் பார்த்துக்கொள்வான். கதையில் கூறப்பட்டுள்ள அரசன். உண்மை என்ற பெண்ணின் திருவடிகளில் விழுந்தது இறைவனின் திருவடிகளில் சரணடைந்தான் என்பது பொருளாகிறது. ஒருவன் உண்மையாக வாழ்கின்றான் என்றாலே, அவன் இறைவனுக்காகவே, இறைவனுக்காக மட்டுமே வாழ்கின்றான் என்று அர்த்தமாகிறது. அவ்வாறான வாழ்க்கை ஒருவன் வாழ்கிறான் என்றால் அவனுடைய அனைத்து தேவைகளும் இறைவன் பூர்த்தி செய்வான் என்பதும் இக்கதையின் சுருக்கமாகும்.

குருதேவர் அருளிய கீழ்க்கண்ட உறுதி மொழியை அனைவரும் கடைபிடிக்கலாம்.

உறுதிமொழி

ஓ, தெய்வீக ஆசானே, எனது அறியாமை இருள் எத்துணை பழமையானதாக இருப்பினும், உனது பேரொளியின் விடியலுடன், இருளானது என்றுமே இல்லாதிருந்ததைப்போல் மறைந்துவிடும் என்பதை நான் உணர்வேனாக!

'ஜெய் குரு'

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909

## முருகனே மும்மூர்த்தி



அழகென்ற சொல்லுக்கு முருகா என்பர். முருகன் என்பதன் பொருள் "அழகன்". "முருகு" என்னும் சொல்லில் தமிழின் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று இன எழுத்துக்கள் உள்ளன. மெல்லினமாகிய "மு" விஷ்ணுவையும், வல்லினமாகிய "ரு" சிவனையும், இடையினமாகிய "கு" பிரம்மனையும் குறிக்கும் என்பர். முருகப்பெருமானை வழிபட்டால் மும்மூர்த்திகளையும் வழிபட்ட பலன் கிடைக்கும்.

– மூ.சக்திவேல். போன்: 9787576858.



# முகூர்த்த நேரமும் செய்யும் செயல்களும்

**பிரம்ம முகூர்த்தம்**

- விடியலுக்கு முன் 3 மணி முதல் 6 மணி வரை பிரம்ம முகூர்த்தம்.

**தேவர்கள் காலம்**

- அதிகாலை 6 மணி முதல் 7 மணி வரை தேவர்கள் காலம்.

**ரிஷிகளின் காலம்**

- முற்பகல் 9 மணி முதல் 12 மணிவரை ரிஷிகளின் காலம்.

**பிதுர்க்களின் காலம்**

- நண்பகல் 12 மணி முதல் 3 மணி வரை பிதுர்க்களின் காலம்.

**சந்தியா காலம்**

- பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை சந்தியா காலம்.

**பூத காலம்**

- முன் இரவு 6 மணி முதல் 9 வரை பூத காலம்.

**பிரேத காலம்**

- நடு இரவு 9 மணி முதல் 12 மணி வரை பிரேத காலம்.

**ராக்ஷச காலம்**

- பின் இரவு 12 மணி முதல் 3 மணிவரை ராக்ஷச காலம்.

◎ இதில் பிரம்ம முகூர்த்த காலத்தில் சுபகாரியங்களும் திதி, நக்ஷத்ரம், சரி யில்லாவிட்டாலும் செய்யலாம்.

◎ உதய காலம் தேவர்களுடையதால் வேளை யும், நக்ஷத்ரமும் உகந்ததாய் இருக்க வேண்டும்.

◎ ரிஷிகளின் காலத்தில் நற்காரியங்கள்செய்ய நல்ல ஓரை, திதி, நக்ஷத்ரம், வேளை அடுத்த படியாகவும், தேர்ந்து செய்ய வேண்டும்.

◎ பிதுர்க்களின் காலத்தில் திதியினை பிரதானமாகவும், நக்ஷத்ரத்தை அடுத்த படியாகவும் தேர்வு செய்ய வேண்டும்.

◎ சந்தியா காலத்தில் மனித விருப்பங்கள், கேளிக்கைகள் போன்ற எக்காரியமும் செய்யாது, இறை வழிபாட்டிற்கும்,ஜெபம், தவம், போன்றவற்றை மட்டுமே செய்ய வேண்டும்.

◎ நடுப்பகல் சரியாக 12 மணி அல்லது, நடு இரவு சரியாக 12 மணியில் எந்தக் காரியத்தையும் துவங்கவோ, முடிக்கவோ கூடாது.





## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# தத்தாத்ரேயர்

இந்த கட்டுரை தத்த ஜெயந்தியின் ஆன்மீக முக்கியத்துவம் மற்றும் கடவுள் தத்தாத்ரேயர் மற்றும் குருதேவ தத்த நாம ஜெபத்தின் விளக்கமாகும்.

தத்த பிறப்பு ஓர் பவுர்ணமி நாளில் இந்து பவுர்ணமி மாதத்தில் மறுபிறப்பு எடுத்த மருகஷீரஷம் நாளை தத்த ஜெயந்தியாக கொண்டாடினர். தீயசக்திகளின் ஆதிக்கம் மிக அதிகமானதால் கடவுள் தத்தாத்ரேயர் மறுபிறப்பு அவதாரம் எடுத்து அசுரர்களை அழித்தார்.

தத்த ஜெயந்தியன்று, தத்தாத்ரேயரின் சைத்தன்யம் 1000 மடங்கு மற்ற நாட்களை விட அதிகமாக இந்த பூமியில் இருக்கும். அன்று கடவுள் தத்தாத்ரேயரை முழு மனதுடனும், பக்தியுடனும் யார் வழிபாடு செய்கிறார்களோ, அவர்கள் தத்த தத்துவத்தை முழுதாக அனுபவிக்கலாம்.

## தத்தாவைப் பற்றிய அர்த்தங்கள்

நிர்குண வடிவில் யார் ஒருவருக்கு எப்போதும் அனுபூதி தருகிறாரோ அவர் தான் தத்தா. யார் ஒருவர் தான் ஆத்மா என்பதை உணருகிறாரோ அவருக்கு நிர்குண அனுபூதி தேவைப்படுகிறது அல்லது அவர் கடவுளை அடையும் பாதையை உணர்ந்து விட்டார் என்று அர்த்தம்.

தத்தாதத்ரேயர், அவதூத், திகம்பரார் என்பது தத்தாவின் மற்ற பெயர்கள் ஆகும்.

தத்தாவின் பிறப்பு வரலாறு :அத்திரி முனிவரின் மனைவி அனுசியாவின் பத்தினித் தன்மை எல்லோருக்கும் தெரியும். அதனால் அவள் மிக அதிகமான சக்தியை பெற்று இருந்தாள். இதனால் இந்திரரும் மற்ற சக்திகளும் அதிர்ச்சி அடைந்தனர். அதனால் கடவுள் பிரம்மா, கடவுள் விஷ்ணு, கடவுள் மகேஸ்வரனிடம் (சிவன்) சென்று தங்கள் மனநிலையை கூறினார்கள். மும்மூர்த்தி கடவுள் அனுசியாவின் பத்தினி தன்மையை சோதிக்க முடிவு எடுத்தார்கள்.

ஒரு முறை அவள் கணவர் அத்திரி முனிவர் வெளியில் சென்று இருந்தார். மும்மூர்த்தி கடவுள் மாறு வேஷத்தில் விருந்தாளி போல் வந்து அனுசியாவிடம் பிச்சை கேட்டார்கள். அவள் தன் கணவர் அத்திரி முனிவர் வரும் வரை காத்திருக்க வேண்டினாள். ஆனால் மும்மூர்த்தி கடவுள் தங்களுக்கு உடனே உணவு கொடுக்க கேட்டார்கள். மற்றும் அவளிடம் உன் விருந்தாளிகளை அவர்கள் விருப்பம் போல் உணவு தருவாயாமே அதனால் தான் நாங்கள் இங்கு வந்தோம் என்று கூறினார்கள். அனுசியாவும் அவர்கள் கோரிக்கையை ஏற்று தங்கள் விருப்பம் போல் உணவு தருகிறேன் என்று கூறினாள். மும்மூர்த்தி அதற்கு நீ நிர்வாணமாக எங்களுக்கு உணவு தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அதற்கு அவள் மனதினில் இப்படி நினைத்துக் கொண்டாள் என் புத்தி தூய்மையானது என் கணவரின் தவம் என்னை காப்பாற்றும். உடனே தன் கணவரை நோக்கி தியானித்ததால். அவள் நினைவில் வந்து இருக்கும் விருந்தாளிகள் தன் குழந்தைகள் என்ற எண்ணம் வந்த உடனே மும்மூர்த்தி அனைவரும் அழும் குழந்தைகளாக மாறி விட்டார்கள். உடனே அவள் அந்த குழந்தைகளை கையில் எடுத்து தன் மார்பில் அணைத்து பால் கொடுத்தாள்.



வெளியில் சென்று இருந்த அத்திரி முனிவர் வந்தவுடன் நடந்ததை விவரித்தாள். அவர் வந்து இருக்கும் குழந்தைகள் மும்மூர்த்தி கடவுள் என அறிந்து கொண்டார். உடனே அவர்களை வணங்கிணார். மும்மூர்த்தி கடவுள் அமைதியாக அவர்கள் முன் தோன்றி அத்திரி முனிவர் மற்றும் அனுசியாவிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டார்கள். அத்திரி முனிவர் மற்றும் அனுசியா தங்களுக்கு அந்த குழந்தைகள் வேண்டும் என்று வரம் கேட்டார்கள். கடவுளும் அந்த தம்பதிகளை வாழ்த்தி விட்டு தன் பயணத்தை மேற் கொண்டார்.

சந்திரன், தத்தா, துருவா ஆகியோர் முறையே கடவுள் பிரம்மா, விஷ்ணு, மற்றும் மகேஸ்வரர் ஆவார்கள். சந்திரனும், துருவாவும் தவம் செய்ய சென்று விட்டார்கள். தத்தா மட்டும் பூமியில் இருந்து ஸ்ரீவிஷ்ணுவின் நோக்கத்தை நிறை வேற்றினார். அதிலிருந்துதான் குரு பரம்பரை தோன்றியது.

## ஆன்மீக அறிவியல்

அத்திரி என்றால் அ + திரி என்பது அகும் (அ என்றால் ஒன்றும்யில்லை – திரி என்றால் முக்குணம்), அதனால் இந்த பெயரின் அர்த்தம் ஒன்றும் இல்லாத முக்குணம். இதைப்பற்றிய புரிதல் கீழே பார்க்கலாம் இந்த முக்குணங்களில் இருக்கும் ஒருவருக்கு விழிப்பு நிலை, கனவு நிலை, ஆழ்ந்த தூக்க நிலை இருக்காது.

இந்த முக்குணங்களில் இருக்கும் ஒருவருக்கு சத்துவ, ரஜா, தமோ குணம் இருக்காது.

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

## கடவுள் தத்தாவின் நோக்கம்

கடவுள் தத்தா ஸ்ரீவிஷ்ணுவின் மறுஅவதாரம். அதனால் அவரின் படைத்தல், காத்தல் மற்றும் மக்கள் மனதில் பக்தியை வளர்த்தல், மற்றும் மக்களுக்கு எளிமையாகவும், ஆனந்தமாகவும் வாழ சொல்லி தருவதுமாகும். தத்தாத்ரேயர் இறந்து போன நம் மூதாதையர்களை மேலே செல்லும் கதியை அருளக்கூடியவர்.

## தத்த ஜெயந்தியின் கொண்டாட்டங்கள்

தத்த ஜெயந்தியின் குறிப்பிட்டு சொல்ல கூடிய ஆன்மீக வழிபாடு எதுவுமில்லை. ஆனாலும் கீழே வருமாறு கொண்டாடுகிறார்கள்.

தத்த ஜெயந்தி வருவதற்க்கு ஏழு நாள் முன்பு ஸ்ரீ குருசரித்திரா படிப்பதை வழக்கமாக வைத்துள்ளனர் (தத்தாவை பற்றிய புகழ் பாடும் புனித நூல்) இதே மாதிரி மற்ற பக்தி வழபாடுகள் பஜன் பாடுவது (புனித பாட்டு) , பூஜை செய்வது. கீழ் வரும் வழிகளில் தத்தாவிற்க்கு பூஜை செய்யப்படுகிறது.

பூஜை செய்வதற்க்கு முன் வலது கை மோதிர விரலால் நெற்றியில் இரண்டு நேர் கோடு போட வேண்டும். இதனால் பூஜை செய்யும் போது தத்த தத்துவம் மேல் எழுந்து ஆன்மீக அனுபூதி கிடைக்க பெற்று நம் புத்தி ஒர் நிலைப்படும்.

பூஜை செய்யும் போது வலது கை மோதிர விரலால் சந்தனமும், மஞ்சளும், குங்குமம் மோந்திர விரல் மற்றும் கட்டை விரல் கொண்டு தத்தாவின் புனித பாதத்தில் இடவேண்டும். மோதிர விரலும் மற்றும் கட்டை விரலும் இணைவதால் அனாகத் சக்கரம் உயிர் பெற்று பக்தி வழியில் செல்ல உதவுகிறது.

குறிப்பிட்ட மலர்கள் மட்டும் தான் சில தெய்வங்களை ஈர்க்கும். பூக்கள் மல்லி, ரோஜா தான் தத்த தத்துவத்தை மிக அதிகமாக ஈர்க்கும் சக்தி கொண்டது. இந்த மலர்களை குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், வடிவத்திலும் அவர் புனித பாதத்தில் சமர்பித்தால், மிக அதிக மான தெய்விக தன்மையை ஈர்க்கும் சக்தியை பெறலாம். அதனால் கடவுள் தத்தாவிற்க்கு 7ன் எண்ணிக்கையிலும் அல்லது 7ன் பெருக்கு களிலும் கூம்பூ (டைமன்ட்) வடிவில் மலர் சமர்பிக்க வேண்டும்.

குறிப்பிட்ட நறுமணம் மட்டும் தான் சில தெய்வங்களை ஈர்க்கும். சந்தனம், சூருபைன், லாசோனியா அல்பா மற்றும் சச்கினிபேரா போன்ற நறுமணம் தத்த தத்துவத்தை மிக அதிகமாக ஈர்க்கும். அதனால் இந்த நறுமணத்தில் செய்த ஊதுபத்திகளை ஏற்றினால் அதிகமான தத்த தத்துவத்தின் நன்மைகளை பெறலாம்.

ஆரம்ப நிலையில் இருக்கும் சாதகர்கள் இரண்டு ஊதுபத்திகளை ஒரே நேரத்தில் ஏற்றி வைத்து ஆன்மீக சாதனையை செய்யலாம். ஊதுபத்தியை வலது கையின் ஆள்காட்டி விரல் மற்றும் கட்டை விரலால் பிடித்துக் கொண்டு மூன்று முறை இடம் இருந்து வலமாக கடவுளின் படத்தின் அல்லது சிலையின் முன்னால் சுற்ற வேண்டும்.

தத்த சிலையின் முன்னால் ஒருவர் ஏழு முறை அல்லது ஏழின் பெருக்குகளிலும் சுற்ற வேண்டும். தத்த ஜெயந்தி அன்று தத்த தத்துவம் மற்ற நாட்களை விட 1000 மடங்கு அதிகமாக இருக்கும். அதனால் அன்று 12 மணி நேரம் "குருதேவதத்தா" என்ற நாம ஜெபத்தை சொல்லி தத்த தத்துவத்தின் மூழு நன்மையை கிரகித்து கொள்ளலாம். முடிந்தால் 46 மணி நேரமும் ஜெப்பிக்கலாம். எவ்வளவு என்ற மணி நேரத்தை கணக்கு பண்ண முடியவில்லை என்றால் அன்று முழுவதும் ஜெபிக்கலாம்.

## தத்த ஜெயந்தியை கொண்டாடும் நடைமுறை வழிகள்

தத்தா என்றால் நான் தான் ஆன்மா என்பதை உணருவது. நாம் எல்லோரும் நடக்கிறோம், பேசுகிறோம், சுவாசிக்கிறோம். எதனால் நம்முள் ஆன்மா இருப்பதால். இதுவே நம்முள் கடவுள் இருப்பதற்க்கு சமம். ஆன்மா இல்லாமல் நாம் வாழ முடியாது. இதை நாம் உணரும் போது, எல்லோரிடமும் அன்புடன் பழகுவோம். தத்த ஜெயந்தி அன்று இதை அடைய முயற்சி செய்வோம்.

கடவுள் தத்தாவின் மறுபெயர் அவதூத். அப்படி என்றால் நம்முள் இருக்கும் நான் என்ற அஹங்காரத்தை அழிப்பவர். ஒ தத்தாத்ரேயா தயவு கூர்ந்து எங்களுக்கு சக்தியையும் புத்தியை யும் தந்து எங்களிடம் உள்ள அஹங்காரத்தை அழிக்கவும்.

கடவுள் தத்தாவின் மற்றும் ஒரு பெயர் திகம் பரர். அப்படி என்றால் எங்கும் நிறைந்தவர். எங்கும் இருப்பவர் அவரோடு ஒப்பிட்டால் நாம் ஒன்றுமில்லை. வாங்க எல்லோரும் வேண்டலாம் ஒ தத்தாத்ரேயா தயவு கூர்ந்து எங்களுக்கு உங்களிடம் முழுசரணாகதி அடைய கற்றுத்தாருங்கள். இந்த வருடம் கார்த்திகை 17, (டிசம்பர் 3ம்) தேதி தத்த ஜெயந்தி வருகிறது

மேலும் விவரங்களுக்கு:
www.hindujagruti.org
தொடர்பு : 9380949626.





# நான் என்பது இந்த உடலல்ல

## அண்டாவும் ரமணரும்

ஒருநாள் விடியற்காலை. மகரிஷியை பார்க்கச் சிலர் ஆசிரமத்திற்கு வந்தனர். ஆசிரமத்தில் யாரையும் காணாததால், அவர்கள் நேரே சமையல் நடக்கும் இடத்திற்குச் சென்றனர். அங்கே ஆசிரம சமையல் பாத்திரங்களை ஒருவர் மெதுவாகக் கழுவிக்கொண்டிருந்தார். அவரிடம், 'ஐயா இங்கே பகவான் ரமணர் எங்கே இருக்கிறார்?' என்று கேட்டனர்.

அதற்கு அந்த மனிதரும், 'ஓ, ரமணரா, இதோ இருக்கிறாரே, இதுதான் ரமணர்' என்று சொல்லி, தான் கழுவிக் கொண்டிருந்த அண்டாவை அவர்களிடம் காண்பித்தார். வந்தவர்களோ அவருக்குக் காது கேட்காதோ என நினைத்துக் கொண்டு, மீண்டும் அதையே கேட்டனர்.

அதற்கு அந்த மனிதர் மீண்டும் தன் கையில் இருந்த அண்டாவைக் காட்டி, "பாருங்கள், இதுதான் ரமணர். ரமண மகரிஷி என்று பேர் கூடப் பொறித்திருக்கிறார்களே, உங்களுக்குத் தெரியவில்லையா?" என்றார்.

வந்தவர்கள், இவர் யாரோ சித்த சுவாதீனமில்லாத மனிதர் போலிருக்கிறது என நினைத்துக் கொண்டு தரிசன ஹாலுக்குச் சென்று அமர்ந்து கொண்டனர்.

பொழுது விடிந்தது. சற்று நேரத்தில் "பகவான் வருகிறார், பகவான் வருகிறார்" என்ற குரல் கேட்டது.

அனைவரும் மரியாதையுடன் எழுந்து நின்று பார்த்தனர், அங்கே பாத்திரம் தேய்த்த அந்த மனிதர் வந்துகொண்டிருந்தார்.

அவர் தான் பகவான் ரமணர் என்று அறிந்து கொண்டதும் அவர்களுக்கு வியப்பு தாளவில்லை. அதே சமயம், பகவான் ஏன் தங்களிடம் அப்படி நடந்து கொண்டார் என்று அறிய விரும்பினர். அவரை அணுகிக் காரணம் கேட்டனர்.

அதற்கு பகவான், "நான்தான் பகவான்னு நெற்றியில எழுதி ஒட்டிக் கொண்டா இருக்க முடியும்.?" என்று கேட்டார், புன் சிரிப்புடன். பின், "நான் என்பது இந்த உடலல்ல; இதைத் தான் நான் இத்தனை வருடங்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். அப்படிச் சொல்லியும் என்ன பயன், எல்லோரும் அதை உணராமல் இருக்கிறீர்களே!" என்றார் வருத்ததுடன்.

தங்களுக்காக வாழாமல் பிறர் காகவே வாழ்ந்த தால்தான் அவர் கள் மகான்கள் என்று போற்றப் படுகின்றனர்







ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா Cell 9894595909
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598


## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

www.aanmeegamalar.com



ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும் ஆன்மிக மாதமிருமுறை இதழ்







# மின்னூல் வடிவத்தில்

## ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து பிரதிகளையும் பார்த்து படித்து மகிழ

## www.aanmeegamalar.com

## பாருங்கள் அனைவருக்கும் பகிருங்கள்

# தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com

www.aanmeegamalar.com

# எங்கே பிசாசு?

ஒரு மனிதன் எந்த விதத்திலும் தனித்து செயல்பட முடியாது. ஏதோ ஒரு விதத்தில் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்கிறோம். உணவு சங்கிலி போல. உணவு சங்கிலியில் மனிதனே மேலே உள்ளான். உண்மையில் மனிதன் தான் மேலே உள்ளானா? படிப்பில் இன்னும் பல பரிமாணங்கள் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளது. அதில் சில உணர முடிந்தவை, சில உணர முடியாதவை.

இதன் பரிமாணங்களை புரிந்து கொள்ள மிக கடினமாகவும் சிக்கலாகவும் இருக்கும். எளிதில் புரிந்து கொள்ள முடியாது. முதலில் நானும் புரிந்துக் கொள்ள சிரமப்பட்டேன். பிறகு சில தேவலோக பிரதிகளால் பரிமாணங்களின் அமைப்பு, எப்படி ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளது, உணவு சங்கிலி எல்லாம் எனக்கு விளக்கம் தரப்பட்டது.

யாகங்களின் மூலம் தேவர்கள் பசி ஆறுகிறது. யாகத்தில் இடும் சமிதா (மாற சுள்ளிகள், க்ஹ்ரித் (நெய்), மந்திரம், சாமக்கிரி (ஹோம மூலிகைகள்), நம் மனோ நிலை, இதனோடு குருவின் அருள் சேர்ந்து வெளிப்படும் சக்தி நேரடியாக தேவலோகத்திருக்கு செல்கிறது. அதை பெரும் தேவர்கள், ஆசியும் வரமும் பொழிவார்கள்.

இதே போல், யார் ஆவி உலகத்திருக்கு, பூத, பிரேத, பிசாசுகளுக்கு உணவு தருவார்? எங்கிருந்து அவர்களுக்கு பசி ஆற சக்தி கிடைகிறது? அவர்களும் பிழைத்தாக வேண்டும், நம்மோடு இருந்தாக வேண்டும் என்று நினைப்பார்கள் அல்லவா.

யுகங்கள் மாற மாற எதிர்மறை சக்திகளின் பலம் வலுத்துக் கொண்டே போகும். சத்யுகத்தில் தர்மமே நிலைத்து நின்றது. துர் சக்திகளின் ஆதிகம் சிறிதும் இல்லை. திரேதா யுகத்தில் துர் சக்திகள் கொஞ்சம் வளர ஆரம்பித்தன. அடுத்து துவாபர யுகம், இந்த யுகத்தில் துர் சக்திகளின் வலிமை கூடியது. இப்போது கலியுகம், துர் சக்திகள் மொத்த ஆட்சியையும் பிடித்துக் கொண்டது. தர்ம சிந்தனை ஏதோ ஒரு குறைந்தபட்ச அளவில் இருக்கிறது, ஆனால் தர்மம் பெரும்பாலும் மறக்கப்பட்டு விட்டது. அதனால் தான் குரு எல்லாம் வியாபாரி ஆனார்கள். ஆனால் யார் வேத தர்மத்திற்கு கட்டுப்பட்டு வழி நடக்கிறார்களோ அவர்களே இந்த ஜனன சுழற்சியில் இருந்து விடுபடுகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் புழு பூச்சிகளாக அடுத்து மகா யுகத்திலும் பிறப்பார்கள்.

இந்த எதிர்மறை சக்தி அதிகம். பூத, பிரேத, பிசாசுகளாக உள்ளது. இவை அனைத்தும் முன்பு மனிதனாக இருந்து மனிதனை கெடுத்து, பின் இந்த நிலையை அடைந்து அந்த வேலையை தொடர்கிறது. யாகம் செய்வதால் தேவர்களுக்கு ஊட்டமான உணவு கிடைக்கிறது. இதனால் மனிதனும் தேவர்களுக்கும் தொடர்பு இருக்கும். அதே வேளையில் எதிர்மறை சக்திகள் தங்கள் உணவுக்காக எளிதில் பாதிப்படைய கூடிய ஒருவனை தேடும். அதை பின் வருமாறு விளக்குகிறேன்.

உதாரணமாக ஒரு வீட்டில் எல்லாரும் நல்ல வாழ்க்கை, சந்தோசம், துயர் இல்லை என்று இருக்க, பிசாசுக்கு உணவு தேவைப்படுகிறது. இப்படி நலமாக உள்ள வீட்டில் பிசாசுக்கு உணவு இருக்காது. பிசாசு இந்த வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தினால் அதற்கு பசுமையான எதிர்மறை சக்தி கிடைக்கும். எனவே அதன் விளையாட்டை தொடங்கும். மனிதன் உணவுக்காக மண்ணை தோண்டி அதற்கு தொந்தரவு தருவது போல, பிசாசு ஏன் அதன் உணவுக்காக நம்மை தொந்தரவு செய்யாது.



பிசாசு மிக பல வீனமான ஒருவனை அந்த வீட்டில் தேர்ந்தெடுக்கும். கோபம், உணவு, மது, காமம் எல்லாம் பொதுவான பல வீனங்கள். இப்படி பலவீனம் உள்ள மனிதன் ஒருவரை சந்திக்கும் போது, பிசாசு அதன் வேலையைக் காட்டும். முதலில் அந்த மனிதரை மிக நல்லவராக அவர் மனதில் தோன்ற செய்யும். நாளடைவில் இருவரும் மிக நெருக்கமான நண்பர்களாகி விட, பிசாசு அந்த நண்பரை தவறானவனாக காட்டி, அவன் மீது வெறுப்பை ஏற்படுத்தும், இதனால் அவர்கள் இடையில் சிறு சிறு வாக்குவாதம் ஏற்படும். பின் பிசாசு எளிதாக சண்டையை பெரிதுபடுத்தி சண்டையை பெரிதாக்கி விடும்.

இந்தநிலையில் அந்த மனிதன் வீட்டிற்கு போகும் போது எதிர்மறை உணர்சிகளை வீடு வரை சுமந்து வருவார். இதனால் வீட்டிலும் சண்டை, வாக்குவாதம் இப்படி தொடங்கி மது பழக்கத்தை ஏற்படுத்தும். சண்டை தொடரும். இந்த எதிர்மறை எண்ணங்கள் தான் பிசாசின் உணவு. பிசாசு இப்போது நன்கு பலப்படுகிறது, இப்போது இவர்கள் மூளையை கட்டுபடுத்தும் வாய்ப்பு பிசாசுக்கு எளிதாகி விட்டது. பின் ஒருவரை பற்றி மற்றவர் மனதில் தவறான எண்ணைகளை உண்டு பண்ணி, சண்டையை மேலும் வலுக்கும். எதிர்மறை ஆற்றல் வளர்ந்துக் கொண்டே போகும். ஆற்றலை ஆக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது. ஆனால் ஆரம்பத்தில் இருந்த நேர்மறை ஆற்றலை இப்போது பிசாசு எதிர்மறை ஆற்ற

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



லாக மாற்றி விட்டது. பிரச்சனை வலுக்க வலுக்க பிசாசு பலம் அடைந்துக் கொண்டே போகும். மேலும், வீட்டில் உள்ளவர்கள் மேலும் மேலும் எதிர்மறை எண்ணம் கொண்ட மனிதர் களை சந்திப்பார்கள், இது வளர வளர, நண்பர்களோடு நேரத்தை விரயம் செய்வது, மது அருந்துவது, சண்டைகள், வீண் விவாதம், நிம்மதியின்மை, தன்னிறைவின்மை, உண்மை இல்லாததை பின் தொடர்வது, போலியான குருவை நம்புவது, பின் தொடர்வதும் தவறான உபதேசம் பெறுவதும், பூஜை என்ற பெயரில் மாந்திரியங்களை அணுகுவது, தமோ குண இன்பங்களை அனுபவிப்பது, அகங்காரம், இப்படி பிசாசு தனக்கு வேண்டிய உணவை அதிகப்படுத்தி ஒரு குடும்பத்தின் மூலம் மற்றொரு குடும்பம், பின் பல குடும்பம், பின் மொத்த சமூகம், நாடு இப்படி தன்னை வளுப்படுத்திக் கொண்டே போகும். இறுதியில் மொத்தத்தில் அழிவு.

## இதில் இருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள வழி:

சரியான குருவைக் கண்டுகொள்ளுங்கள். அவர் கையை இருக்கப்பிடி. ஆன்மீக அனுபவத்தை பெற்றவரானாலும், எப்போதெல்லாம், எதிர்மறை எண்ணங்கள் வருகிறதோ, அப்போது விழித்துக் கொள்ளுங்கள் இது பிசாசின் விளையாட்டு என்று. ஒரு போதும் எதிர்மறை எண்ணைகளை உள்ளே அனுமதிக்காதீர்கள். பின் அது உங்களை பலவீனப்படுத்தில் அது பலம் அடைந்து விடும் உங்களை அழித்துவிடும். பூத பிரேத பிசாசு எல்லா இடங்களிலும் உள்ளது, இந்த யுகத்தில் இருக்கும் பெரும்பாலான மனிதர்கள், தங்கள் உடலை பிரிந்த பிறகு, குறைந்த புண்ணிய கர்மாவின் காரணமாக இன்னொரு உடல் உடனே கிடைப்பதில்லை. எனவே பல காலம் நரகத்தில் காத்திருக்க வேண்டி வரும். அப்படியே கிடைத்தாலும் அதிகமாக கெட்ட எண்ணங்கள் கொண்டவர்கள் இருப்பதால், அப்படிபட்ட யோனியில் வந்து பிறக்க நேருகிறது. அதனால் முன்பே கவனமாக எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து விடுங்கள்.

பிசாசு எந்த வழியில் வேண்டுமானாலும் வரலாம். உங்கள் நண்பர் ரூபத்தில், ஏன் குரு ரூபத்தில் கூட வரலாம். அது நீங்கள் நம்பும் ஒரு ரூபத்தில் வரும். உங்கள் நம்பிக்கை கெட்டும் போகும் விதத்தில் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தும். இப்படி உங்கள் நம்பிக்கையை கெடுத்து, உங்களையும் கெடுத்து விடும்.

பிசாசு புகுவதை தெரிந்துக் கொள்வதற்கான அறிகுறிகள். குழப்பம், சண்டை, வீண்வாதம், நம்பிக்கைகுரியவர்களின் மீது வரும் சந்தேகம், விபரீதத்தில் ஈடுபடுவது, போலி குருவிடம் பணத்தைக் கொடுத்து உபாசனை பெறுவது, இப்படி பல. உங்கள் காதுகளுக்கு தவறான செய்தியை எட்ட வைத்து, உங்களை அது நம்ப வைக்கும். பின் அதன் பேரில் நீங்கள் நடந்துக் கொள்ளும் போது, அழிவை நோக்கி நகர்கிறீர்கள். நம்பக் கூடாத மனிதர்களை நம்ப வைக்கும், இப்படி விழிப்புணர்வு அற்ற மனிதர்களிடம் பழகுவீர்கள். விசித்திரமாக இருக்கலாம், ஆனால் பிசாசின் ஆயுதமே உங்களை சுற்றி இருக்கும் மனிதர்கள் தான்.

இப்படி பலவீனமானவர்கள் கண்டிப்பாக தங்கள் குருவை விட்டு விலகி, திருடர்களை நம்ப ஆரம்பிப்பார்கள். பின் உங்கள் எண்ணங்கள் எதிர்மறையாக செயல்பட ஆரம்பிக்கும். மாயை உண்மை என இருக்கும். அவித்யா வித்தியாவாக தெரியும்.

பிசாசுக்கு இஷ்டமான இடங்கள் மது அருந்தும் இடம், அரைகுறை மங்கையர் வளம் வரும் இடம், கிசு கிசு பேசும் மனிதர்கள், சண்டை, கனத்த





# பெருமாள் நெற்றியில் அக்னி



சென்னை சூளைமேட்டில் உள்ள பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயில் மிகவும் பழமையானது. ஏராளமான மகான்கள், அடியார்கள், சித்தர்கள் திருவடிபட்ட தலம். இங்கு மூலவர் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது நெற்றியிலிருந்து தீப்பொறி வெளிப்பட்டது. ஆகவே இது அக்னி தலமாக கருதப்படுகிறது. தங்கள் வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள், திருவோண நட்சத்திர நாட்களில் கருடசேவை நடத்துகின்றனர். சின்ன கருட வாகனத்தில் பவனி வரும்பெருமாள் பக்தர்கள் தேங்காய் நெய்தீபம் ஏற்றியும் வேண்டுதல் வைக்கிறார்கள். தன்வந்திரி,லட்சுமி ஹயக்கிரீவர், தட்சிணாமூர்த்தி சந்நிதிகளும் உள்ளன. அஸ்த நட்சத்திரம் அன்றும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் அர்ச்சனை செய்வது விசேஷம். கோயிலினுள் அரசமர வேர் விநாயகர் போல தோற்றமளிக்கிறது. சுயம்பு அரசமர விநாயகராக அவர் போற்றப்படுகிறார்.

– மூ.சக்திவேல். போன்: 9787576858.

உணவு வகைகள்.

## பிசாசு பலம் இழக்கும் இடங்கள்:

குரு, ஆன்மீக தளங்கள், யாகங்கள், தியானம் மற்றும் சத்சங் நடக்கும் இடங்கள் .இந்த இடங்களை எல்லாம் பிசாசு புறக்கணிக்கும்.

தீய சக்திகள் எல்லா இடங்களிலும் இருந்துக் கொண்டே தான் இருக்கிறது. மயானம், பால் அடைந்த வீடு போன்ற இடங்களில் மட்டும் தான் இருக்கும் என்று இல்லை. எல்லா இடங்களிலும் அது இருக்கும், நம்மை சுற்றி இருக்கிறது. நமக்கு தான் அது இருப்பது தெரியவில்லை. உங்களுக்கு மிக உணரும் தன்மை இருந்தால், ஒவ்வொரு விதமான சக்தியை ஒரு இடத்திலோ அல்லது ஒரு மனிதர் இடத்திலோ உணர முடியும், உணரும் பொருள். ஒரு நல்ல அனுபவத்தையோ, சந்தோசத்தையோ , புது விதமான உணர்வையோ, துக்கமோ, பயமோ, படபடப்போ, எதுவாக வேண்டு மானாலும் இருக்கலாம். ஏன் என்றால் பேய் பிசாசு எல்லாம், ஒரு வகை ஆற்றல் தான். ஆற்றல் ஒரு இடத்திலோ அல்லது மனிதர் இடத்திலோ தங்கும் போது, நமது பிராணனில் அதிர்வுகளை ஏற்படுத்தும். அந்த அதிர்வு மென்மையாகவோ, கனமாகவோ இருக்கலாம்.

மன அழுத்தம் கனமான அதிர்வு. மகிழ்ச்சி மென்மையான அதிர்வு, பற்று அற்ற நிலை, அதிர்வே இல்லாத நிலை. ஒவ்வொரு உணர்வும் ஒவ்வொரு விதமான அதிர்வு, நம் முன்னோர்கள் சொல்லி சென்ற மூன்று விதமான குணங்கள். சாத்விக், தமோ, ரஜோ. சாத்விக் நுட்பமான அக உலகை சார்ந்தவர்கள். ரஜோ புற உலக ஆசைகளால் புற உலகத்தில் இருப்பவர்கள். தமோ மிக தாழ்ந்த ஆற்றலோடு தொடர்புடைவர்கள். பிரேத பிசாசு எல்லாம் தாழ்ந்த ஆற்றல் சார்ந்தது.

உலகத்தில் எல்லாம் சங்கிலி தொடர் போன்றது, ஒரு உயிரின் உணவு, இன்னொரு உயிருக்கும் விஷம் ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு விதமான ஊட்டம் தேவைப்படுகிறது. தாவரங்கள் சூரியனின் ஒளி மற்றும் நீரால் ஊட்டம் பெறுகிறது. பசுவிற்று தாவரத்தில் இருந்து கிடைகிறது, இவை எல்லாம் மென்மையான உணவுகள். மிருகத்தனமான உணவுகள் என்று சொல்லும் போது ரத்தம் மற்றும் சதையை உண்பது. இதை தாழ்ந்த நிலை என்றும் சொல்லலாம். இப்படிப் பட்ட தாழ்ந்த நிலை சக்திகள் தாழ்ந்த வகை ஊட்டங்களை பெற விரும்புவது. வதைப்பது, கொள்வது, மன அழுத்தம், சண்டை இவை எல்லாம் பிரேத பிசாசுகளுக்கான உணவுகள்.

நீங்கள் நினைகின்றீர்களா. குறிப்பிட்ட இடத்தில் மட்டும்தான் கெட்ட சக்திகள் இருக்கும் என்று? இல்லை. எங்கே தெய்வம் உள்ளதோ அங்கே துர் சக்திகளும் இருக்கும், அவர்கள் இங்கே இருப்பதற்கான நோக்கமும் நம்மை போல தான். அவைகளுக்கும் வாழ வேண்டும், உணவு தேட வேண்டும், தன்னை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எல்லாம் இருக்கிறது.

எதிர்மறை எண்ணங்களை உருவாகுவதால் எதிர் மறை சக்திகள் வெளிப்படுகிறது. அதன் மூலம் தங்களை பலபடுத்திக் கொள்கிறார்கள். நம் மீது அவர்களின் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம், உணர்வுகளில் தூண்டுவதன் மூலம் இப்படி பல வழிகளில் தங்கள் தேவையை அவைகள் நிறைவேற்றிக் கொள்கிறது.

யோகி அஷ்வினி.
www.dhyanfoundation.com

# தீயசக்திகளையும் எதிர்மறை சக்திகளையும் எளிதாக விரட்டியடிக்க போகர் அருளிய பரிகாரம்



மனிதபிறவி எடுக்கும் ஒவ்வொருவரும் தமது கர்மவினைகளை அனுபவிக்க பிறந்தவர்களேஞ் ! நம்முடைய கர்மவினைகளுக்கு ஏற்ப நன்மையோ அல்லது தீமையோ நம் வாழ்வில் நடந்தவண்ணம் இருக்கும். ஒருவருக்கு செய்வினை பாதிப்பு ஏற்படுவதும் அவரது கர்மவினையை பொறுத்ததே. அந்த பாதிப்பிலிருந்து விடுபடுவதும் விடுபடாமல் பிறரால் ஏமாற்றப்படுவதும் அவரது கர்மவினை பலனே.

இக்காலத்தில் பொறாமை, வஞ்சனை கொண்ட மனிதர்கள் தமது எதிரிகளை நேரடியாக எதிர்க்க துணிவில்லாமல் மறைமுகமாக தாக்கி அழிக்கவே ஏவல், பில்லி, சூனியம் மற்றும் செய்வினை இவற்றை செய்கின்றனர். இது நம் நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இது எல்லா மதங்களிலும் காணப்படுகிறது. இதற்கு சாதி, மதம், நாடு என்ற பேதம் இல்லை. வெகு சுலபமாக செய்வினை செய்கிறார்கள். ஒருவருக்கு செய்வினை செய்யும் எவரும் நல்ல முறையில் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. கடவுள் என்ற மாபெரும் சக்தியின் தண்டனையிலிருந்து எவரும் தப்ப முடியாது.

மாந்திரீகம் மூலம் மற்றவர்களுக்கு கெடுதலை உண்டாக்கும் மனிதர்களே இவ்வுலகில் தீய சக்தி ஆவார்கள். அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் இவர்களிடம் மாட்டிக்கொண்டு அவதிபடுபவர்கள் எண்ணிக்கை சொல்லிலடங்காது.

இவ்வாறு அவதிபடுபவர்கள் தங்களின் துன்பம் தீர மந்திரவாதிகளை அணுகி தீர்வு பெற நினைக்கின்றனர். ஆனால் 100க்கு 95 பேர் தீர்வு கிடைக்காமல் அந்த மந்திரவாதிகளின் பிடியில் சிக்கி தங்களின் பணத்தையும், வாழ்வையும், நிம்மதியையும் தொலைக்கின்றனர். செய்வினையால் பாதிக்கப்பட்டவர்களில் மகான்களும் உள்ளனர். ஆதிசங்கரர், அருணகிரிநாதர் போன்றோரே இதற்கு சாட்சி. மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் தெய்வத்திற்கே சூனியம் செய்த வரலாறும் உண்டு. பண்டாசூரன் விக்ன யந்திரத்தின் மூலம் சக்தியின் சேனைகளை நோயுற செய்தான். சக்தியால் அவனை வெல்ல இயலவில்லை. தடைகளும், அபசகுணங்களும் ஏற்பட்டன. அதன் பிறகே சக்தி தனது மைந்தனாகிய விநாயக பெருமானை வேண்ட விநாயக பெருமான் அந்த விக்ன யந்திரத்தை கிழித்து கடலில் எறிந்தார். அதன் பின்னரே சக்தி பண்டாசூரனை வதம் செய்தாள்.

இப்படிப்பட்ட செய்வினை, ஏவல், பில்லி, சூனியம், கண்திருஷ்டி மற்றும் பிற தீயசக்திகளும் எதிர்மறை சக்திகளும் அழிந்தோட ஒரு எளிய முறை உண்டு. இதோ அதன் செய்முறை !

பொருட்கள் அளவு

1. வெண்கடுகு 250 கிராம்
2. நாய்க்கடுகு 250 கிராம்
3. மருதாணி விதை 250 கிராம்
4. சாம்பிராணி 250 கிராம்
5. அருகம்புல் பொடி 50 கிராம்
6. வில்வ இலை பொடி 50 கிராம்
7. வேப்ப இலை பொடி 50 கிராம்

மேற்கண்ட பொருட்களை தயார் செய்து கொள்ளவும். இவை அனைத்தும் நாட்டு மருந்து கடைகளில் வெகு எளிதாக கிடைக்கக்கூடியவை. எங்கும் தேடி அலைய வேண்டாம். சாம்பிராணியை மட்டும் பொடி செய்து கொண்டு மீதமுள்ள 6 பொருட்களுடன் சேர்த்து ஒரு கலனில் அடைக்கவும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருட்களின் கலவையை செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிறு கிழமைகளில் அடுப்புக்கரி நெருப்பில் தூவி தூபம் போடவும். தி□னமும் செய்தால் தவறில்லை. 48 நாட்களுக்குள் நிச்சயம் பலனுண்டாகும். ஏவல், பில்லி, சூனியம், செய்வினை, எதிர்மறை மற்றும் தீய சக்திகள் அனைத்தும் நிச்சயம் நீங்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். குடும்பத்தின் உறுப்பினர்களிடையே ஒற்றுமை உண்டாகும். லட்சுமி கடாட்சம் உண்டாகும்.

மேற்கண்ட கலவையை நெருப்பில் தூவும் போது கீழே சிந்தாமல் கவனித்துக் கொள்ளவும். ஏனெனில் மேற்கண்ட 7 பொருட்களும் தெய்வத்தன்மை பொருந்தியவை. யார் காலிலும் படக்கூடாது. மேற்கண்ட முறையை பயன்படுத்தி மாந்திரீக கோளாறுகளிலிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களை காப்பாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் துணை நிற்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இது எல்லாம் வல்ல போகர் பெருமான் மக்களுக்கு துன்பத்திலிருந்து விடுபட அருளியதாகும்.

## அற்புதமான இயற்கை வைத்திய முறைகள்

**கிராம்பு** இரண்டு கிராம்புகளை பல் வலி உள்ள இடத்தில் வைத்து சிறிது நேரம் கடித்திருந்தால், பல்வலி இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

**உப்பு** பல்வலி கண்டால், ஒரு கோப்பை வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு டீஸ்பூன் கல் உப்பைக் கரைத்து, லேசான சூட்டில் கொஞ்சம் கொஞ்சமாக வாயில் ஊற்றி கோப்பை முழுவதும் கொப்பளித்து துப்பிவிடவும். இவ்வாறு தினமும் செய்து வர, பல்வலி மற்றும் வீக்கம் குறையும். மேலும் உப்பு நீரினால் கிருமிகளும் அழியும்.

**பூண்டு** ஒரு பல் பூண்டை நசுக்கி வலி உள்ள இடத்தில் வைக்க பல்வலி படிப்படியாக குறையும். பூண்டில் அல்லிசின் என்ற நோயை எதிர்க்கும் ரசாயனப் பொருள் உள்ளதால் இந்த நல்ல பலன் கிடைக்கும்.

**கோதுமைப்புல் சாறு** கோதுமைப்புல் சாற்றினை அருந்தி வர பல் வலி விலகும். ஒரு சிறிய தொட்டியில் கோதுமைகளை ஆங்காங்கே பதித்து தண்ணீர் விட்டு வர, அதிலிருந்து புல் முளைக்கும். அதனை பறித்து சுத்தப்படுத்தி மைய அரைத்து சாறெடுத்து அருந்தலாம்.

# மனக்கலக்கம், எதிரி-பயம் நீங்கும் விநாயகர்



கஜாசுரன் என்பவன் தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். விண்ணில் இருக்கும் அண்டத்தை காலால் உதைத்தான்.

அண்டச்சுவர் உடைந்து ஆகாசகங்கை பூலோகத்தை நோக்கி வந்தது. உயிர்கள் அனைத்தும் மரண பயத்தால் கலங்கின. தேவர்கள் விநாயகரிடம் சரணடைந்தனர். கஜாசுரனைக் கொல்ல ஆயத்தமானார் விநாயகர்.

முதலில் பூலோகத்தைக் காக்க, கால்பெருவிரல் நகத்தால் அண்டச்சுவரில் ஏற்பட்ட துளையை அடைத்தார். ஆகாச கங்கை தடைபட்டது. பின், கஜாசுரனை ஒரே நொடியில் வீழ்த்தினார். கலக்கம் தீர்ந்த தேவர்கள் விநாயகரை பூஜித்து மகிழ்ந்தனர். தேவர்களின் கலக்கம் தீர்த்த இவர் “கலங்காமல் காத்த விநாயகர்’ என பெயர் பெற்றார். குரு தலமான ஆலங்குடியில் (திருவாரூர் மாவட்டம்) அருள்பாலிக்கிறார். இவரை வழிபட்டால் மனக்கலக்கம், எதிரிபயம் நீங்கும். மனநிம்மதி உண்டாகும்.

# காலக்கணக்கு தெரியுமா

காலத்தை சத்ய யுகம், திரேதாயுகம், துவாபர யுகம், கலியுகம் என பிரிப்பர். சத்ய யுகம் 17 லட்சத்து 28,000 ஆண்டுகள். திரேதாயுகம் 12 லட்சத்து 96,000 ஆண்டுகள். துவாபர யுகம் 8 லட்சத்து 64,000 ஆண்டுகள். கலியுகம் 4 லட்சத்து 32,000 ஆண்டுகள். நான்கையும் இணைத்து சதுர்யுகம் என்பர். யுகங்கள் இடைவிடாது தொடர்ந்து கொண்டே இருக்கும். கலியுகத்தின் 5112வது ஆண்டில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாமும் தொடர்ந்து பிறவி எடுத்துக் கொண்டே இருப்போம்.

# பிரபஞ்சமே சிவம்

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தையும் பஞ்சபூதம் அல்லது பிரபஞ்சம் என்கிறோம். பிரபஞ்சம் என்றால் “கடவுளுக்கு சம்பந்தமான ஐந்து’ என்பது பொருள். “”பிரபஞ்சம் என்பது பஞ்ச பூதங்களின் சேர்க்கை. பரப்பிரம்மமே ஐம்பெரும் பஞ்சபூதங்கள்’’ என்று பிரஸ்ன உபநிஷதம் கூறுகிறது.

இயற்கையே இறைவன் என்னும் கோட்பாடின் அடிப் படையில் இந்த ஐந்திற்கும் தனித்தனியாக சிவலிங்கம் வடித்து பஞ்சபூதத்தலங்களை ஏற்படுத்தினர். அவையே காஞ்சிபுரம் அல்லது திருவாரூர் (மண்), திருவானைக்காவல்( நீர்), திருவண்ணாமலை( அக்னி), காளஹஸ்தி (வாயு), சிதம்பரம் (ஆகாயம்) ஆகிய தலங்களாகும்.

இதேபோல, சிவபெருமானுக்கு பொன்னம்பலம், வெள்ளியம்பலம், தாமிரசபை, ரத்தினசபை, சித்திரசபை ஆகிய ஐந்து சபைகளாக சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி, திருவாலங்காடு, குற்றாலம் ஆகிய தலங்கள் அமைந்துள்ளன.

# முருகனுக்கு முதல் கோயில்

முருகனுக்கு கட்டப்பட்ட முதல் கோயில் புதுக்கோட்டை அருகேயுள்ள ஒற்றைக் கண்ணூர் கோயில் என கூறப்படுவதுண்டு. இங்கு முருகன் ஒரு திருக்கரத்தில் ஜபமாலை ஏந்தியுள்ளார். மறுகரம் சின் முத்திரையுடன் உள்ளது.



# பாம்புக்காவடி எடுத்தது எப்படி?

முருகனுக்கும் பாம்புக்கும் தொடர்புண்டு. பாம்பைக் கண்டால் “சுப்பா ஓடிப்போ! சுப்புராயா ஓடிப்போ!’ என்று சொல்லும் வழக்கம் கர்நாடகாவில் உண்டு. கர்நாடகத்தில் குக்கே சுப்பிரமணியர் நாகப்பாம்பின் அம்சமாக வணங்கப்படுகிறார். தமிழகத்திலும் பாம்பை காவடியில் வைத்து, சர்ப்பக்காவடியாக நேர்த்திக்கடன் செலுத்தும் வழக்கம் இருந்தது.

சர்ப்பக்காவடிக்குரிய விரதம் கடுமையானது. ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் சென்று ஆறு நாட்கள் விரதம் மேற்கொள்வர். முருகன், அந்த பக்தரின் கனவில் தோன்றி பாம்பிருக்கும் புற்றைச் சுட்டிக்காட்டுவார். அந்த புற்றுக்குள் இருக்கும் பாம்பைப் பிடித்து பச்சை மண் பாத்திரத்தில் இடுவர். அதனை காவடியாகக் கட்டி, திருச்செந்தூருக்கு சுமந்து செல்வர். வள்ளி குகை அருகில் மண்சட்டியோடு விட்டு விடுவர். பாம்பு அதிலிருந்து வெளியேறிச் சென்றபின், செந்தில் முருகனைத் தரிசிப்பர். இப்போது, சர்ப்பக்காவடி எடுக்கும் வழக்கம் இல்லை.

தொகுப்பு: மு.சக்திவேல்
செல்: 9787576858.

# ஐந்து கோலம்! ஐந்து பலன்!!

சிவபெருமான் கோயில்களில் உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூவகைநிலை களில் காட்சிதருகிறார். கருவறையில் பெரும்பாலும் அருவுருவத்திருமேனியான சிவலிங்கமாகவே வீற்றிருப்பார். அருவத்திருமேனியாக (உருவமே இல்லாத நிலை) சிதம்பரம், திருப்பெருந்துறை போன்ற கோயில்களில் அருள்புரிகிறார். உருவத்திருமேனியை சிவமூர்த்தங்கள் என்று குறிப்பிடுவர். இம்மூர்த்தங்களில் ஐந்துமூர்த்தங்கள் மிகவும் சிறப்புடையவை.



1. நமக்கு என்ன பலன் தேவையோ அதற்கேற்ற வடிவத்தில் சிவபெருமானை வழிபட்டு பலன் பெறலாம். சாந்தமே உருவான தட்சிணாமூர்த்தியாக வழிபடுபவர்கள் மனஅமைதியும் ஞானமும் கைவரப்பெறுவர்.
2. வசீகரமூர்த்தியாகத் திகழும் பிட்சாடனரை வணங்கினால் முகத்தில் வசீகரமும், மனதில் புத்துணர்வும் பிறக்கும்.
3. வக்ரமூர்த்தியாக விளங்கும் பைரவராக சிவனை வழிபட்டால் எதிரித்தொல்லை நீங்கி தைரியம் உண்டாகும்.
4. ஆனந்த தாண்டவம் ஆடும் நடராஜராகத் துதித்தால் மனமகிழ்ச்சியும் குதூகலமும் ஏற்படும்.
5. அம்மையப்பராக சிவபார்வதி வீற்றிருக்க முருகன் நடுவில் அமர்ந்திருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தியை. தரிசித்தால் வாழ்வில் நிம்மதியும், மனநிறைவும் ஏற்படும்.


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



# ஓம்கார நாதத்தில் சுற்றிவரும் பிரபஞ்சம்

அன்பர்களின் மத்தியில் குருஜியின் சொற்பொழிவுகள் பல நடைபெறுவது வழக்கம் அந்த வகையில், ஒரு மாலைப் பொழுதில் நடைபெற்ற குருஜியின் சொற்பொழிவு....

இனிய மாலை பொழுதில் உங்களை சந்திப்பதற்கு கிடைத்திருக்கும் சந்தர்ப் பத்தை இறைவன் கொடுத்த நல்ல வாய்ப்பாக கருதி நமது சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையிலும் கலங்கி குழம்பி, சேரும் சகதியாக கிடைக்கின்ற நமது உள்ளத்தை சீர்படுத்துகிற வகையிலும் சில நல்ல விஷயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

நாம் இங்கே அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தாலும் இந்த அரங்கத்திற்கு வெளியே எங்கும் அமைதி இருப்பதாக கூறமுடியாது. வாகனங்கள் செல்லுகிற சத்தம், மனிதர்கள் விளையாடுகிற சத்தம், விலங்குகளின் சத்தம், வினோதமான இயந்திரங்களின் சத்தம் என்று ஆயிரக்கணக்கான சத்தங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறது. இந்த உலகில் சத்தம் என்பது இல்லாத இடமே இல்லை. ஆழமான தண்ணீருக்குள்ளும் காற்றே புகாத மண்ணுக்குள்ளும் சத்தம் இருப்பதை நவீன விஞ்ஞானம் உறுதி செய்கிறது.

உலக முழுவதும் ஒலி மயமானது. ஒலியில் தான் உலகமே இருக்கிறது. இன்னும் ஒருபடி சொல்லப்போனால் உலகம் என்பதே ஒலிதான் என்று பலர் சொல்கிறார்கள். மனிதரின் மூலாதாரத்தில் ஏற்பட்டு கொண்டிருக்கின்ற ஒலி அலையே உயிர் என்றும், அந்த ஒலி நின்றுவிட்டால் சரீரம் சவமாகி விடுமென்றும், நமது சித்தர்கள் கூறுகிறார்கள்.

உலகம் என்பது சத்தம், உயிர் என்பது சத்தம் அப்படி என்றால் கடவுள் என்பதும் சத்தம் தானா? என்று கேட்டால் ஆம். ஒலியின் விந்தாக, நாத விந்தாக இறைவன் இருப்பதாக அனுபவித்து பார்த்தவர்கள் கூறுகிறார்கள்.

ஓடி விளையாடுகிற காலத்தில், உயர்த்தி பிடிக்கின்ற காற்றாடி சுற்றுகிற போது ஒரு ஓசை வருகிறது. மாட்டுவண்டியின் சக்கரம் சுற்றுகிற போது, ஒரு ஓசை வருகிறது. குழந்தையின் சிரிப்பிலும், குமரி பெண்களின் கலகல பேச்சிலும், பிணத்தின் முன்னால் வைக்கின்ற ஒப்பாரியிலும், ஒரு ஓசை வருகிறது. இப்படி அனைத்து செயல்களுக்கும் அதனதன் தரத்திற்கு ஏற்ற ஓசை வருகிற போது, உலகம் என்ற மிகப்பெரிய பந்து நிற்காமல், நிதானிக்காமல் யாருடைய கட்டளைக்கும் காத்திருக்காமல் சுற்றிக் கொண்டே இருக்கிறதே அதிலிருந்தும் பிரம்மாண்டமான ஓசை வரவேண்டுமே அது நமது காதுகளில் இதுவரை விழவில்லையே? அது ஏன் என்ற கேள்வியும், சிந்தனையும் நம் முன்னால் மலைபோல் நிற்கிறது.

சிறிய பொருளொன்று சுற்றினாலும் ஓசை வருகிறபோது, பெரிய பொருளான பூமி சுற்றுவதனால் ஓசை வாராதா என்ன? கண்டிப்பாக ஓசை வருகிறது. அது நமது காதுகளால் கேட்க முடியாத ஓசை. மனித காதுகளில் சக்திக்கு ஒரு எல்லை உண்டு. அவற்றால் மிக மெல்லிய ஒலிகளையும் கேட்க இயலாது. பிரம்மாண்டமான சத்தத்தையும் கேட்க முடியாது. பூமி சுற்றும்போது வருகிற சத்தம் பிரம்மாண்டமானது. அதை சாதாரண காதுகளால் கேட்க இயலாது. ஆனால், அந்த சத்தம் வேறு சில பொருட்களின் மீது பட்டு எதிரொலிக்கும் போது மனிதனால் சிறிது உணர்ந்து கொள்ள முடியும்.

மலைகளின் உச்சியின் மீது காற்று ஓங்கி வீசுகிற போது அந்த சத்தத்தை கேட்கலாம். மரங்கள் காற்றில் அசைகிறபோது அந்த சத்தத்தை, சண்ட மாருதம் என்ற சூறைக்காற்று வீசுகிற போது அந்த சத்தத்தை கேட்கலாம். கடல் அலைகள் ஓங்கி ஓங்கி தரையில் அடித்து, மீண்டும் கடலுக்குள்ளே செல்லுகிற போது அந்த சத்தத்தை கேட்கலாம். ஆலயங்கள், மண்டபங்கள், மைதானங்கள், சந்தகடைகள் இவற்றிலிருந்து வருகிற மனித சத்தங்களை தூரத்திலிருந்து கேட்கும் போது அந்த சத்தத்தை கேட்கலாம். மரங்களில் கூடு கட்டி குடும்பம் நடத்துகிற பறவைகள் எழுப்புகிற கூட்டுக்குரல் இசையிலும், வெண்கலம், இரும்பு, வெள்ளி இவற்றை ஒன்றோடு ஒன்று தாக்க செய்யும் போது எழும் ஓசையிலும் அந்த சத்தத்தை கேட்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக நெருப்பு கட்டுக்கடங்காமல் எரிந்தாலும் அந்த இடத்திலும் அந்த சத்தத்தை கேட்கலாம்.

இந்த சத்தங்களை பலமுறை நாங்கள் கேட்டிருக்கிறோம். இவைகள் எல்லாம் “ஓம்” என்ற ஓம்கார சத்தம் தானே இதற்கும் உலகம் சுற்றுவதற்கும் என்ன சம்மந்தமென்று நீங்கள் கேட்கலாம். நிச்சயம் சம்மந்தம் இருக்கிறது. உலகம் சுற்றுகிற சத்தமே ஓம்காரம் என்பது தான். பூமி மட்டுமல்ல பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து கோள்களுமே ஓம்கார நாதத்தில் தான் சுற்றி வருகிறது. இன்று நாம் கண்களில் காணுகிற, காணமுடியாத பொருட்கள் அனைத்துமே “ஓம்” என்ற சத்தத்தில் தான் அடங்கி இருக்கிறது. கடவுளும் கூட “ஓம்” என்ற உருவத்திலேயே இருப்பதாக மெய்ஞானிகள் கூறுகிறார்கள். பக்கம் சாராது பேசுவதில் வல்லவன் என்று பேர் பெற்ற வள்ளுவன் கூட, அகரமுதல எழுத்தெல்லாம் என்று துவங்கி சர்வேஸ்வரனை அகர எழுத்தோடு ஒற்றுமைபடுத்தி காட்டுகிறார். அகரம் என்பதே ஓம்காரம் தான். ஓம் காரம் வேறு, அகரம் வேறு அல்ல.

குருஜி இப்படி உரையாற்றி கொண்டிருந்தபோது ஒரு அன்பர் பணிவோடு எழுந்து தங்கள் உரையின் போது குறுக்கீடு செய்வதற்கு மன்னிக்கவும். அடியேனுக்கு சிறிய சந்தேகம் இருக்கிறது. அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்றும் கலந்து தான் ஓம்காரம் என்று கூறுவார்கள். நீங்கள் கூட அதே அர்த்தத்தில் தான் வள்ளுவனின் குறளையும் குறிப்பிடுகிறீர்கள் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. எனக்கு வருகின்ற சந்தேகம் இதில் அல்ல. அகாரமும், ஓங்காரமும் ஒன்று என்பது தமிழ் மொழிக்கு மட்டும் தானா? தமிழ் மொழிக்கு மட்டும் தான் என்றால் ஓம் காரமே உலகத்தின் வடிவாக இருக்கிறது என்ற உங்கள் பொது கருத்தை ஏற்பது சிரமம் அன்றோ என்று கேட்டார். அவரது கேள்வியையும் உள்வாங்கி கொண்ட குருஜி தனது உரையை தொடர்ந்தார்.

அகாரம், உகாரம், மகாரம் என்பது தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய அட்சரங்கள் அல்ல. இன்று மனிதர்களால் பேசப்படுகிற மொழிகள் அல்லது பேச்சு வழக்கில் இல்லாத மொழிகள் ஆகிய அனைத்து மொழிகளுக்குமே இவைகள் சொந்தமானது. ஒவ்வொரு மொழியையும் எடுத்து, அதிலுள்ள உயிர் எழுத்துக்களில் ஓங்காரம் எப்படியெல்லாம் பரிமளிக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல எனக்கு ஆசை தான். ஆனால், சகல பாஷைகளும் அறிந்தவன் அல்ல நான். தாய் மொழி யான தமிழை கூட ஒரு குழந்தையின் அளவிற்கு தெரிந்தவனாகவே இன்றுவரை இருக்கிறேன்.






இருந்தாலும் எனக்கு தெரிந்தவரையில் இதை விளக்குவது நலம் என்று கருதுகிறேன்.

தென்னிந்தியாவில் பேசப்படுகிற துளு, கன்னடம், தெலுங்கு, மலையாளம், மராட்டியம் போன்ற மொழிகளாக இருக்கட்டும். வங்கம், குஜராத்தி, அசாமி, இந்தி, உருது போன்ற வட இந்திய மொழிகளாக இருக்கட்டும். அவைகள் அனைத்துமே நமது தமிழை போலவே எழுத்து அமைப்புகளை ஏறக்குறைய பெற்றிருக்கின்றன. எனவே அவற்றிலும் அ, உ, ம போன்ற எழுத்துக்கள் ஒரே மாதிரியாகவே அமைந்து ஓம்ஹாரத்தை சொல்லுகின்றது. இன்று உலக மொழி என்று போற்றப்படுகிற ஆங்கிலத்திலும் ணீ, வீ, னீ ஆகிய உயிர் எழுத்துக்கள் ஓம் காரத்தை காட்டுகிறது. அரபு மொழியில் முதல் எழுத்தாக அறியப்படும் அம்ஸா என்ற எழுத்தும், அகர வரிசையில் முதல் எழுத்தாக வருவதை வைத்தும், பாரசிக மொழியில் அலிப் என்பது முதல் எழுத்தாக இருப்பதை வைத்தும், மொழிகள் அனைத்திற்கும் மூலமாக இருப்பது ஓம்காரமே என்று நாம் உறுதியாக கூறலாம்.

இவைகள் மட்டுமல்ல உலகில் பல மதங்கள் இருப்பதை நாமறிவோம். அந்தந்த மதங்கள் இறைவனுக்கு பற்பல பெயர்களை கொடுத் திருப்பதையும் நாமறிவோம். அந்த பெயர்களை எல்லாம் எடுத்து, ஆராய்ச்சி செய்தோம் என்றால் அதிலும் "ஓம்" என்ற வார்த்தை மறைந்திருப்பதை அறிந்து, மறைத்து போகவேண்டிய நிலை இருக்கிறது. ஏறக்குறைய இந்து மதத்தை ஒட்டிய வயதுடைய பாரசிக மதமான சொராஸ்திரிய மதத்தில் கடவுளை அஜூர் மஸ்ட் என்று சொல்வார்கள். இதிலுள்ள ணீ, ஷ், னீ என்ற எழுத்துக்கள் அ, உ, ம என்ற எழுத்துக்களுக்கான ஓம்ஹாரத்தையே அழுத்தம் திருத்தமாக சொல்லுகிறது. சீனா, ஜப்பான், தாய்லாந்து, திபெத் முதலான நாடுகளில் லாமக்களின் கருத்துப்படி இறை சக்தியினுடைய பெயர் மனி பத்மி ஹோம் என்ற சொல்லாகும். இந்த சொல்லினுள்ளும் "ஓம்" ஒளிந்திருப்பதை தெளிவாக காணலாம்.

யூதர்களில் தெய்வத்தின் பெயர் ஜெஹோவா. இந்த ஹிப்ரூ மொழியினுடைய வார்த்தைக்கு நான் இருக்கிறேன் என்பது பொருளாகும். இதை யப என்றும் அழைப்பார்கள். இதிலுள்ள மீ, ணீ, ஷீ என்ற எழுத்தும், பிரணவ மந்திரத்தை குறிக்கும் எழுத்தாகும். கிறிஸ்தவ மதத்தில், இறை வழிபாட்டை முடித்தபிறகு பிரார்த்தனைகளை செய்தபிறகு ஆமென் என்று கூறுவது வழக்கம். என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்றாக அறிவோம். இந்த ஆமென் என்ற வார்த்தை ஓம் என்ற வார்த்தையின் திரிபு என்பது சொல்லாமலே விளங்கும். ஓம் என்பது தான் உலகமாக இருக்கிறது என்று இந்துமத நூல்கள் குறிப்பிடுவது போலவே கிறிஸ்தவ பைபிள் ஆதியாகமத்தில் முதலாம் அத்தியாயம் முதலாம் வசனத்திலேயே ஆதியில் வார்த்தை மட்டுமே இருந்தது அந்த வார்த்தையே கடவுளாக இருந்தது என்று கூறுவது நன்கு கவனித்து பார்த்தால் ஓங்காரத்தின் நிலைப்பாடு என்னவென்று புரியும்.

இன்று இந்து மதத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று தனித்தே பிரிந்து நின்று, முறைப்போடு இருக்கின்ற நமது சகோதரர்களின் மதமான இஸ்லாம் மதத்திலும் கடவுளை குறிக்கும் வார்த்தையாக அலிப்_லாம்_மீம் என்ற வார்த்தை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக குரானில் கருதப்படுகிறது. இந்த சொல்லின் உள்ளாக இருக்கும் ணீ, றீ, னீ என்பதும் அ, வு, ம என்பதற்கும் அதிக தூரம் இல்லை என்பது தெளிவாக தெரியும். இப்படி உலகில் உள்ள சகல பொருட்களிலும் ஓம்ஹாரம் என்ற ஓம் என்ற பிரணவ மந்திரம் மறைந்திருக்கிறது. இந்த ஓம் சாதாரணமானது அல்ல மந்திரங்களுகேல்லாம் உயர்ந்தது. அரச மந்திரம் காயத்திரி என்று கூறுவார்கள். ஆனால் அந்த காயத்திரியை விட ஆயிரம் மடங்கு உயர்வானது ஓம் என்ற மந்திரம். அதனால் தான் பகவான் கிருஷ்ணன் தனது பகவத் கீதையில் ஏழாம் அதிகாரம், எட்டாவது ஸ்லோகத்தில் எல்லா வேதங்களிலும் நானே ஓம்ஹாரமாக இருக்கிறேன் என்று கூறுகிறான்.

ஓம்ஹாரத்தில் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய மூன்று உலோகங்களும், பஞ்ச பூதங்களும், மனிதனது பத்து இந்திரியங்களும் அடங்கி இருப்பதோடு மட்டுமல்ல. இறைவனை கண்ணுக்கு காட்டுகிற வடிவமாகவும், காதுக்கு கேட்கிற ஒலியாகவும் இருக்கிறது. இதை உணர்ந்து கொண்டு தினசரி பிரணவ மந்திரத்தை யார் சொல்கிறார்களோ அவர்கள் வாழ்க்கையில் சர்வ மங்களமும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434





# குரு நிந்தனை கூடாது....!

குருவை மதித்து நடக்க வேண்டும் என்று புராணங்கள் கூறுகின்றன. நாம் கற்கும் ஒவ்வொரு கலையையும் முழுவதும் அறிந்து அதனை தெரியாதவர்களுக்கு போதிக்கும் அனைவரும் குருவின் ஸ்நானத்தில் உள்ளவர்களே... அந்தவகையில் அந்த கலைகளைக் கற்கும் அனைவரும் சிஷ்யர்களாவார்கள். இவ்வாறு சிஷ்யர்களாக விளங்குபவர்கள் ஒருசில பழக்க வழக்கங்களை விலக்க வேண்டிய மிகவும் அவசியமாகும். அந்தவகையில் சில தவறான விஷயங்கள் கூறப்பட்டுள்ளன:

1. குருவை கேலி அல்லது தூஷணை செய்தல்
2. குருவை தன் மனம்படி செயல்பட கட்ட ளையிடல்
3. குருவுடன் கொடுக்கல் வாங்கல் முதலியவை செய்தல்
4. குருவின் எதிரியோடு பழகுதல். குரு தூஷணையை காதால் கேட்டல்
5. குருவின் சொல்லும் செயலும் உலக இயல்புக்கு மாறாக உள்ளதே என்று நினைத்தல்; சொல்லுதல்
6. குருவும் மனிதப்பிறவிதானே அதனால் குறைகள் இருக்கும் என்று எண்ணுதல்
7. பகவானே குருவாக எழுந்தருளி இருக்கிறார் என்பதில் சந்தேகம்
8. குரு ஸமர்ப்பணத்தில் லோபமான எண்ணம்
9. குருவின் கட்டளையை உலகுக்கு பயந்து செய்யாமல் இருத்தல்
10. பிறர் பார்க்கிறார்களே என்று குருவுக்கு நமஸ்காரம் செய்ய வெட்கப்படுதல்
11. குருவை நீண்ட நாட்கள் பார்க்காது இருத்தல்
12. குருபாதுகை தான் கிடைத்து விட்டதே இனி ஸ்தூலமாக குரு எதற்கு என்ற எண்னம்
13. குருவிடம் இன்ன பலன் பெறுவதற்கு இன்ன மந்த்ரங்கள் கொடுங்கள் என்று கேட்பது. இந்த மந்த்ரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்று அவரிடம் கூறுதல்
14. எனக்கு ஒரு விதமாகவும் அவனுக்கு ஒருவிதமாகவும் கொடுத்தீர்களே என்று குருவிடம் கேட்டல்; மந்த்ரம் இவ்வளவு சின்னது தானா? என்று கேட்டல்
15. வேறு சிஷ்யர்கள் குருவிடம் நெருங்கி பழகுதல் கண்டும், அவர்களுக்கு குரு செய்யும் அதிக சலுகைகள், உபசாரங்களைக் கண்டோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அஸூயை(பொறாமை) கொள்ளுதல்
16. பிறர் குருவிடம் பேசும் போது அது என்ன என்று அறிந்து கொள்ள முயற்சி செய்தல்
17. எல்லா மந்த்ரங்களும் உபதேசம் பெற்றாகி விட்டது; இனி என்ன பயம் என்ற எண்ணம்
18. (குரு உறவினாக இருப்பின்) உபதேசம் செய்து கொண்ட பின்னரும் உறவு கொண்டாடுதல்
19. உபாஸனைகள் பல இருக்கும் போது, தான் செய்வதே சிறந்தது அல்லது முக்யமானது எனக் கூறிக் கொள்ளல்
20. தான் இதை இவ்வாறு செய்து முடித்தேன் என்று தன்னை தானே புகழ்ந்து கொள்ளுதல்
21. வாழ்கை நடத்த வேண்டிய பணம் இல்லாத நபர்களையும், உபாஸனைக்கு பணம் செல வழிக்க முடியாதவர்களையும் கேலி செய்தல்
22. தன் அனுபவங்களை குருவிடம் கூறாமல் பிறரி டம் கூறுதல்
23. மந்த்ர சாஸ்த்ர ரஹஸ்யங்களை ப்ரஸித்தமாக வெளியே பேசுதல்
24. அங்க ஹீனர்களை கேலி செய்தல்
25. ஸ்த்ரீகளை தூஷித்தல், துன்பம் உண் டாக்குதல் மரியாதையின்றி அழைத்தல்
26. ஸ்த்ரீகளை அடிமையாக நினைத்தல் கேலியாக பேசி சிரித்தல்
27. எல்லா ஸ்த்ரீகளும் தேவியின் வடிவங்களே என்ற அடிப்படை உண்மையை நம்பாமை
28. நான்தான் குருவிற்கு அத்யந்தம், ப்ரியமானவன் என்று கூறல்

ஆகியவை செய்யக்கூடாது என்பது முன்னோர் வாக்கு.

– ஷ்யாம்சுந்தர்


/NPMWAI
fb.com/Nigalkalam
fb.com/VelichamArakkattalai
fb.com/NigalkalamPunnagai
தலைநிமிரட்டும்! பத்திரிகைச் சமூகம்!!
நியூஸ் பிரஸ் மீடியா வெல்ஃபேர் அசோசியேஷன்
நம்பிக்கை ஒளியேற்று! வெற்றி நம் பக்கம்!!
வெளிச்சம் அறக்கட்டளை
Velicham Arakkattalai
இணைந்து வழங்கும்
கோவையில் பிரம்மாண்ட மேடை!
எதுவரினும் அஞ்சோம்! எமக்குத் தேவை நீதி!!
www.nigalkalam.com
நிகழ்காலம்
அரசியல், சமூக புலனாய்வு மாத இதழ்
EXCELLENCE AWARD 2017
கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் விழா!
சமுதாயத்திற்கு மக்கள் சேவை செய்த நல் உள்ளங்களுக்கு ISO சான்றிதழ் பெற்ற மற்றும் INTERNATIONAL ஒப்புதல் பெற்ற UNIVERSITY சார்பாக கௌரவ டாக்டர் பட்டமும் சான்றிதழும் வழங்கப்படும்.
நாள்: 17.12.2017
நேரம்: மாலை-5.00மணி
சமூக சேவை, கல்வித்துறை, தொழில் துறை, பிற துறைகள் சார்ந்த சாதனை புரிந்த நண்பர்கள் தொடர்பு கொள்க!
ஆர்வம் உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்!
Ct: 7871135351 / 98847 44111 / 72990 90903
பெயர், முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் மற்றும் முக்கிய குறிப்புகளுடன்
editornigalkalam@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு: நுழைவு கட்டணம் உண்டு.
*Conditions Apply
e-mail: honourablecrown4u@gmail.com
Online Media Partner
WORLD TV NEWS
Print Media Partner
குற்றம் குற்றமே
KUTTRAM KUTTRAME
நிகழ்காலம் புன்னகை
Associate Partner
MALUMIGAL SEITHY SEAFARERS NEWS
KLEAN & KLEAR facility management
SRI PADMANABHA SEVA TRUST

ADVT.



# “ஆ(ம)ஹா பாரதம்”

## பாகம் 7

உத்தகங்கர் மன்னரிடமிருந்து குண்டலங்களோடு வெளியேறினார். வழியில் நீர்நிலையைத் திற்குச் சென்று கரையில் குண்டலங்களை வைத்து விட்டு அனுஷ்டானத்திற்காகச் சென்றார்.

தக்ஷகன் எனும் நாகராஜன் அங்கு மாறுவேடத்தில் வந்து அந்த குண்டலங்களோடு மறைந்தான். உத்தங்கரும் தமது மந்திரபலத்தால் அவனைப் பின் தொடர்ந்து வந்து அவனை பிடித்து விட்டார். அவன் நாகமாக மாறி ஒரு புற்றினுள் நுழைந்து மறைந்து விட்டான்.

புற்றை ஒருதடியால் விலக்கப் பார்த்து முடியாமல் துவண்டார் உத்தங்கர். இந்திரன் தனது வஜ்ஜிராயுதத்தை அனுப்பி உதவுமாறு சொல்ல அதன் மூலம் நாகலோகம் வரை பிளந்து அதனுள் சென்றார்.

அதன் எல்லையை காணமுடியாததால் சர்ப்பங்களை பலவாறாக துதித்தார். அதுவும் பயனின்றிப் போனது. அச்சமயம் இந்திரன் மாறுவேடத்தில் ஒரு குதிரையின் மீது அங்கு வந்து நின்றிருக்க அவரை வேண்டினார் உத்தங்கர்.

“என்ன வேண்டும் உனக்கு” என இந்திரன் கேட்க எல்லா நாகங்களும் எனக்கு வசமாக வேண்டுமென கேட்டார். சரி அப்படியானால் நீ இந்த குதிரையின் மலத்துவாரத்தில் வாயால் ஊது என்றான். உடனே அவரும் ஊத குதிரையின் எல்லாத் துளைகளிலிருந்தும் தீக்கொழுந்துகள் கிளம்பின.

நாகலோகம் முழுவதும் புகை பரவியதும் தக்ஷகன் பயந்து குண்டலங்களோடு தன் வீட்டிலிருந்து வெளியே வந்து அதனை உத்தங்கரிடமே கொடுத்துவிட்டான்.

அதைப் பெற்றுக் கொண்டவர் அதிக நேரமாகி விட்டபடியால் அந்த குதிரையிலேயே ஏறி ஒரு நொடியில் குருவிடம் வந்து சேர்ந்தார். சரியான நேரத்தில் சீடன் குண்டலங்களை கொண்டு வந்து குரு பத்திரியை வணங்கி அவரிடம் அளித்ததும் அவள் ஆசி கூறியனுப்பினாள்.

குருவை வணங்கி நடந்தவைகளைக் கூற குருவானவர் இந்திரன் எனது நண்பனாவான். அவனது அருளாலேயே நீ குண்டலங்களோடு திரும்பி வர முடிந்தது. உனது சேவையை மிக சிறப்பாய் செய்து முடித்து எங்களை மகிழ்ச்சியடையச் செய்தாய். இனி நீ சகல நலங்களும் பெற்று வாழ்வாய் சென்றுவா மகனே! என்று ஆசீர்வதித்து அனுப்பினார்.

உத்தங்கர் மனதில் தக்ஷகன் செய்த செயல் மிகவும் வருத்தத்தை உண்டாக்கிக் கொண்டேயிருந்தபடியால் அதற்கு பழி வாங்க எண்ணி ஜனமேஜயனை சந்திக்கச் சென்றார். அவரை வரவேற்று பூஜித்து தான் செய்ய வேண்டிய சேவை என்ன என கேட்டான் ஜனமேஜயன்.

உனது தந்தையை தக்ஷகன் எனும் நாகராஜன் தான் கொன்றான். அந்த நாகத்தை பழி தீர்த்துக் கொள். பகைவரையழிக்க கூடிய சர்ப்ப யாக கர்மம் பற்றிய செய்தி சாஸ்த்திரத்தில் காண கிடைக்கிறது. அதற்குரிய காலமும் கிடைத்துள்ளது. நீ இதனை உடனடியாக செய்வாய்.

என் குருசேவைக்கும் இடையூறு செய்தவன். நீ இந்த யாகத்தை செய்து அந்த தக்ஷகனை யாகத் தீயில் ஹோமம் செய்து விட்டால் நானும் மகிழ்ச்சியுறுவேன்.

உனது தந்தை ராஜ ரிஷிகளின் வம்சத்தை காத்தவர். குற்றமற்றவர். அவரை காப்பாற்ற வந்த காச்யபர் எனும் பிராம்மணரையும் திருப்பி அனுப்பி விட்ட பாதகன் அவன். எனவே உடனே நீ இதனை நிறைவேற்று என்று கூறியதும் ஜனமேஜயனுக்கு கோபம் கொப்பளித்தது. உடனே அவர் தனது மந்திரிகளிடமும் நடந்தவைகளை கேட்டறிந்து மிகவும் துன்பமடைந்தார்.

கதைக்கு நடுவே ஒரு ஒய்வு .

உத்தங்கரிடமிருந்து தக்ஷகன் குண்டலங்களை பறித்து செல்ல வேண்டிய அவசியம் என்ன? நாகலோகத்தில் இல்லாததா?

ஒருவனால் அவனது வம்சத்திற்கு தீமை வரவேண்டிய காலம் வந்தால் அதள பாதாளத்தில் இருந்தாலும் அவனை அழைத்து வந்து விடும் என்பதற்கு சான்று இது.

தக்ஷகன் செய்த செயலால் அவனது வம்சத்தில் எத்தனை உயிர்கள் பின்னாளில் யாகத் தீயில் வந்து விழப் போகிறதோ? இது ஒரு கோணம்.



மறு கோணம் அந்த யாகம் மட்டும் நடைப் பெறாது போயிருந்தால் இன்று நாம் எத்தனை நாக, சர்ப்பங்களை சந்திக்க வேண்டி வந்திருக்குமோ? இப்படிப் பார்த்தால் தக்ஷகன் நமக்கு செய்த பேருதவிதான் இது என்றே சொல்ல வேண்டும்.

இந்திரன் உத்தங்கருக்கு உதவுகிறான் என்பது மற்றொரு சிறப்பு. பூமியில் உள்ள யாரும் மேல்நிலையை அடைந்து விடா தபடி தடுப்பதில் (சோதிப்பதில்) முதல் நபராக வருபவரே இந்திரன்தான்.

அந்த இந்திரன் உதவு கிறான் எனில் அவனும் நம் நலனில் பங்கு கொள்கிறான் என்றுதானே பொருள்.

அக்னி குதிரை ரூபத்தில் இருக்க அந்த குதிரையின் மலத் துவாரத்தில் உத்தங்கர் ஊதியதும் தீக்கொழுந்துகள் வெளியேறி புகை மண்டலமாகியதும் தக்ஷகன் வெளியில் வருகிறான்.

எல்லா நாகங்களும் என் வசமாக வேண்டும் என இந்திரனை உத்தங்கர் கேட்கும் இடம் ஒரு நாகம் நமது இருப்பிடத்திற்குள் வந்து ஏதாவது ஒரு துவாரத்திற்க்குள் சென்று மறைந்துவிட்டால் நாம் அதிக சிரமப்படாமல் புகை மண்டலத்தை உருவாக்கினால் போதும் அது வெளியே வந்து விடும் எனும் செய்தி கிடைக்கிறது.

குண்டலங்களை குருவிடம் உத்தங்கர் ஒப்படைத்தப்பிறகு குருவானவர் இந்திரன் எனது நண்பரானதால் உனக்கு உதவினார் என்கிறார். இதனால் குருவிற்கும், இந்திரனுக்கும் கூட இந்த நிகழ்வில் பங்கு உண்டு என்றாகிறது. அன்றைய காலத்தில் ஒரு நன்மையை (எவரும் அறியாதபடி) பலரும் சேர்ந்து செய்ய முன் வந்தனர். இன்று விளம்பரமின்றி ஒருவரும் செய்வதில்லை.

தக்ஷகனைப் பழி வாங்க உத்தங்கர் ஜனமேஜயனிடம் தெரிவிப்பது தன்னால் ஆகாது என்பதால் அல்ல. பொது நல சேவையில் எல்லோரும் பங்குக் கொள்ள வேண்டுமே எனும் உயர் நோக்கத்தால் தான் ஜனமேஜயனை இணைத்தார்.

உத்தங்கர் ஜனமேஜயனிடம் விஷயத்தை தெரிவித்ததும் அப்படியே அதனை ஏற்றுக் கொள்ளாமல் தன் மந்திரிகளிடமும் விசாரித்து தெரிந்துக் கொள்ள எண்ணியது மன்னனுக்கே உரிய தனிச் சிறப்பு.

உத்தங்கரின் கோபத்தீயில் தக்ஷகன் வந்து விழுந்தானா இல்லையா என்பதற்கு பதில் இப்போதில்லை என்னிடம்.

Type செய்து கொண்டு வருகிறேன் உங்களிடம்.

அடுத்த இதழில்....

- Thali,
Ph:9600999279

# ஞானம், விழிப்பு, முக்தி தரும் கார்த்திகை விளக்கு ஒளி

கார்த்திகை மாதம் என்பதே ஒரு சிறப்பு மிக்க மாதம். ஏனென்றால், படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மனும், காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவும், நானே பெரியவன் என்று வாதாடிப் பலவருடங்கள் போரிட்டனர். சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றினார். அடியையும் முடியையும் தேடும்படி அசரீரி கூறியது. இருவரும் அடிமுடி தேடிக் காணமுடியாமல் சிவபெருமானே முழு முதற் கடவுள் என்று ஏற்றுக்கொண்டனர். அவர்கள் இருவரும் தாம் கண்ட ஜோதியை எல்லோரும் காணும்படி காட்டியருள வேண்டும் என்று விண்ணப்பிக்க அவர் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று காட்டியருளினார். இந்தத் தத்துவத்தை விளக்குவதே கார்த்திகை தீபத் திருவிழாவாகும்.

கார்த்திகை மாதத்தில்தான் நம்முடைய உடம்பில் உள்ள நாடி, நரம்புகளெல்லாம் சம ஓட்டத்தில் இருக்கும் என்று சொல் வார்கள். அப்படி நாடி நரம்புகள் சம ஓட்டத்தில் இருக்கும் போது தியானம் செய்யாதவர்களுக்கும் ஞானம் சித்தியாகும். அப்பொழுது இறைவன் ஒளிப் பிழம்பாக வெளிப்படுகிறான். இந்தக் கார்த்திகை மாதத்தில்தான் அண்ணாமலையார், எல்லாம் வல்ல ஆவுடையார் சிவனே ஒளிப்பிழம்பாக வெளிப்படுவதாக ஐதீகம்.

கார்த்திகை விழாவை குமராலாய தீபம், சர்வாலய தீபம், விஷ்ணுவாலய தீபம் என மூன்றாக ஆலயங்களிலும் வீடுகளியும் கொண்டாடுவர்.

குமராலய தீபம்:முருகன் ஆலயங்களில் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் கூடிவரும் நாள்.

விஷ்ணுவாலய தீபம்: விஷ்ணு ஆலயங்களில் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்தில் ரோகினி நட்சத்திரம் கூடிவரும் நாள்.

சர்வாலயதீபம்:ஏனையஇந்து ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்து முழுமதி திதி.

இந்த கார்த்திகை மாதத்தில் தீபத்தை அவசியம் தரிசிக்க வேண்டும் என்று நமது முன்னோர் கூறியுள்ளனர். விளக்கில் இருந்து உருவாகும் ஒளியை மனதிற்குள் அனுப்பினால், இதயத்திற்குள் ஒளி ஆற்றலை கொண்டு சென்றால், எல்லா வகையிலுமே நமக்கு நன்மை உண்டாகும். தவிர, ஒரு தெளிவு நிலை, தீர்க்க நிலை உண்டாகும். மற்ற மாதங்களைவிட கார்த்திகை மாதத்தில் இவ்வாறு தீப ஒளியை வணங்கும்போது அதிகப்படியான பலன் கிடைக்கும் என்பதால் கார்த்திகை தீபத்தை அனைவரும் கண்டு தரிசிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.



இரவு பகல் வந்து செல்வதைப்போன்று, ஒரு சில மாதங்களும், ஒருசில அற்புதமான பலன்களைத் தரவல்ல மாதங்களாக திகழ்கிறது என்பதை நம் முன்னோர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

மகாபாரதப் போரில் அம்புப் படுக்கையில் இருந்த பீஷ்மர் சாதனா பாதையில் இறக்க விரும்பாமல், அம்புப் படுக்கையில் காத்திருந்து, ‘உத்தராயண’த்தில் உயிர் நீத்தது நாம் அனைவரும் அறிந்த கதைதான். அவர் உத்தராயணத்தில் (அ) கைவல்ய பாதையில் இறக்க விரும்பியதற்கான காரணம், அந்த நேரத்தில் தான் வாழ்க்கையின் பலன்களை அறுவடை செய்யமுடியும். நம் உள்நிலையில் அறுவடை செய்ய வேண்டியவற்றை கைவல்ய பாதையில் மிக எளிதாக அறுவடை செய்துவிடலாம். இந்த கார்த்திகை மாதம், சாதனா பாதையில் இருந்து கைவல்ய பாதைக்கு மெதுவாக மாறும் நேரம். எனவேதான் அந்த நேரத்தை தேர்ந்தெடுத்து தன் உயிரை நீத்தார் பீஷ்மர்.

இந்த காத்திகை மாதத்தில் உருவாகும் ஒளிக்கு மிகச்சிறந்த சக்தி உள்ளது, இந்த சக்தியை அதிகரிக்க சுத்தமான நெய், எண்ணெய் மூலம் விளக்குகள் ஏற்றினால், அந்த விளக்குகளும் அற்புதமான சக்திகளை வெளியிடும் ஆற்றல் பெறும், அவ்வாறு விளக்குகளில் இருந்து வெளிவரும் ஒளி, ஞானோதயம், விழிப்புணர்வு, முக்திக்கான அடையாளக் குறியீடுகளாக மாறும். இதைக் குறிப்பதற்குத் தான் வீட்டிலேயே மேற்கண்ட பலன்களை அடைய, விளக்கேற்றும் அற்புதமான வழிமுறைகளை நம் முன்னோர்கள் உருவாக்கினர்.

எந்த வித பழக்கத்தையும் கடவுள் நேரிடையாக மக்களுக்கு எடுத்துரைத்தது கிடையாது.ஒரு சில செய்கையால் பலன்கள் கிடைக்கும் என்பதை இறைவன் மக்களுக்கு உணர்த்தியுள்ளார். அதை உணர்ந்த நமது முன்னோர்கள், அப்பழக்க வழக்கத்தால் மக்களும் பயன் அடைய வேண்டும் என்பதால் அதை ஆன்மிகத்துடன் இணைத்து இறைவழி பாடாக மாற்றிவைத்துள்ளனர்.

இதுபோன்ற பல்வேறு வாழ்க்கை வழிமுறைகளால் பின்னிப் பிணையப்பட்டுள்ளதுதான் இந்து மதம், எனவேதான் இந்து மதத்தை வாழ்வியல் கலை என்றும் கூறுகின்றனர். ஒருசில பழக்க வழக்கங்கள் கால, நாகரீக வளர்ச்சியால் பலன் இல்லாததைப் போன்று தெரிவதால் அதை மூடப் பழக்கம் என்று ஒருசிலர் ஆராய்ந்து பார்க்காமலேயே பொய்யுரை பரப்பி மக்களை முட்டாள்களாக்குவதும் அரங்கேறுவதுமுண்டு.

அந்தவகையில் இதுவரை கார்த்திகை மாதத்தில் விளக்கேற்றுவதன் அவசியம் என்ன என்பதை தெரியாமல் இருப்பவர்கள் கண்டிப்பாக இந்த மாதத்தில் விளக்கேற்றி, அதிலிருந்து வரும் ஒளிக்கற்றை வணங் கினால் ஞானம், விழிப்புணர்வு முக்தி போன்றவற்றை எளிதாக அடைய லாம்.

– நாகராஜன், ஆசிரியர்

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.